
உ

ஸ்ரீ கற்பகாம்பாள்ஸமேத கபாலீச்வரர் துணை

# திருமயிலைக் கீர்த்தனைகள்



இயற்றியவர்:
"கலாபூஷணம்" "கலாரத்னா"
"கவிமாமணி" "மஹாவித்வான்"
யாழ்ப்பாணம் இணுவில்
பிரம்மஸ்ரீ மா.த.ந. வீரமணி ஐயர், M.A.J.P.

வெளியிடுபவர்:
R. கிருஷ்ண ஸ்வாமி ஐயர்
இல. 25, காமராஜர் அவென்யூ
2வது தெரு, அடையாறு, சென்னை.
1.1.2003

உ

ஸ்ரீ கற்பகாம்பாள் ஸமேத கபாலீச்வரர் துணை

# பதிப்புரிமை

"திருமயிலைக் கீர்த்தனைகள்" என்னும் எனது தமிழிசைப் பாடல்கள் 100 கொண்ட இந்நூலின் பதிப்புரிமையையும், விற்பனை உரிமையையும், சென்னை - 600 020, அடையாறு, இல. 25, காமராஜர் அவென்யூ 2வது தெரு இல்லத்தைச் சார்ந்த பிரம்ம ஸ்ரீ கிருஷ்ணசாமி ஐயர் அவர்களுக்கு என் இதய பூர்வமாக வழங்குகின்றேன் என்பதை இத்தால் யாவருக்கும் தெரிவிக்கிறேன்.

இங்ஙனம்

ந. வீரமணி ஐயர்

திருமயிலைக் கீர்த்தனைகள்

நூலாசிரியன்

இணுவில்

சுன்னகம் 1.1.2003

உ
சிவமயம்

# HINDU MINISTER & MARRIAGE CELEBRANT


**Dr. N. Somaskandakkurukkal**, M.I.H. Dip.,

Director, Modern Hindu Cultural Arts
Advisor, Australian Counsil of Hindu Clergy
Rep., International Hindu Religious Gurupeeda...

Sai Vamaha Sabai (WA)
Sri balamurugan Temple

16, Mondogalup Road,
Mandogalup - 6167 (Perth)


Date : 10.12.2002

## ஸப்தரிஷியின் சாதனைக்கு வாழ்த்துக்கள்

"மஹா வித்வான்" யாழ்ப்பாணம் **வீரமணி ஐயர், M.A., J.P.,** அவர்களது சங்கீத ஸாஹித்ய சாதனைகளுக்கு ஈடு இணை கூறல் அரிது. அவரது ஆக்கங்கள் அனைத்தும் "மயிலைக் குறவஞ்சி", "72 மேளகர்த்தா ராகக் கீர்த்தனங்கள்", "திருச்செந்தூர் கீர்த்தனங்கள்", "35 தாளக் கீர்த்தனங்கள்" 175 தாளக்கீர்த்தனைகள் ஆகிய அனைத்தும் அளவளாவிய பெருமை வாய்ந்தவை. இன்றும் சுமார் ஆயிரத்து எழுநூற்றைம்பதுக்கு மேற்பட்ட நாட்டிய நாடகங்கள் ஆக்கியமை அவரது நடன, இசைக்கலையில் மகத்தான சாதனை எனலாம். அவரது சில கீர்த்தனங்களைத் தொகுத்து வெளியிடும் சிவநெறிச்சீலர் பிரம்மஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி ஐயர் அவர்கட்கும் பாராட்டுக்கள். அரிய முயற்சிக்கும் வாழ்த்துக்கள்.

சுபம்.

ந. சோமாஸ்கந்தக்குருக்கள்

உ

சிவமயம்

அருள்மிகு கற்பகாம்பிகை உடனுறை கபாலீச்வரர் துணை



இலங்கை, யாழ்ப்பாணம், இணுவில், எனும் கிராமத்தைச் சார்ந்தவர் மஹாவித்வான் யாழ்ப்பாணம், பிரம்மஸ்ரீ மா.த.ந. வீரமணி ஐயா அவர்கள். 1956-ம் ஆண்டு அவர் இயற்றிய பாடலான "கற்பகவல்லி நின் பொற்பதங்கள் பிடித்தேன்" எனும் ராகமாலிகை, தமிழிசை உலகில் அன்னாரைப் பிரபலம் அடையச் செய்தது. அன்றியும் அக்காலத்தில் அவர் இயற்றிய "திருமயிலைக் குறவஞ்சி" எனும் இசை நூல், மயிலை கபாலீச்வரர் தேவஸ்தான வெளியீடாக வெளியிடப் பெற்றது. ஸ்ரீ கொத்த மங்கலம் சுப்பு அவர்கள், அந்நாடகத்தைக் கதாகாலக்ஷேப உருவில் 24.03.1957 அன்று தானே, பாடி, நூலை அரங்கேற்றம் செய்து வைத்தார். ஸ்ரீ டி.எம். சௌந்தரராஜன் அவர்கள், கற்பகவல்லி பாடலைப் பாடி, அம்பாள் பக்தர்கள் உள்ளங்களை நெக்குருகச் செய்து விட்டார் அந்தப் பாடலைக் கேட்கும் போது நமது உள்ளங்கள் கற்பகத் தாயாரின் பாதங்களில் சரணடைவதை எப்போதும் எம்மால் உணரக் கூடியதாக உள்ளது.

ஸ்ரீ கற்பகாம்பாளின் அநுக்ரஹத்தாலும், பெரியோர்களின் ஆசீர்வாதங்களினாலும், ஸாஹித்ய கர்த்தா, மஹாவித்வான், யாழ்ப்பாணம் பிரம்மஸ்ரீ ந. வீரமணி ஐயா, எம்.ஏ. அவர்கள் இயற்றிய

1. "திருமயிலைக் கீர்த்தனைகள்"
2. "72 மேளகர்த்தாராகத் திருமயிலைக் கற்பகாம்பாள் கீர்த்தனைகள்"
3. "35 தாளத் திருமயிலைக் கீர்த்தனைகள்"

என்னும் மூன்று நூல்கள் இன்று வெளியீடு செய்யப் பெற்றுள்ளன. இந்த நூல்களை கற்பகாம்பாளின் பாதத்தாமரைகளில் வைத்துச் சமர்ப்பணம் செய்தபோது, மூன்று செவ்வந்திப் பூக்கள், அம்பாளின் அபய ஹஸ்தத்திலிருந்து நூல்களின் மீது .ஒவ்வொன்றாக விழுந்த தெய்வீக அருட்காட்சி, பக்தர்கள் அனைவரையும் புல்லரிக்கச் செய்து விட்டது. அந்தக் கற்பகத்தாயே, இந்தக் கலைப்படைப்புகளை ஏற்றுக் கொண்டு விட்டாள் என்பது தான் இதன் அர்த்தம். 72 மேளகார்த்தாராகத் திருமயிலைக் கற்பகாம்பாள் கீர்த்தனைகள், எனும் நூலும் 35 தாளத் திருமயிலைக் கீர்த்தனைகள் எனும் நூலும், தமிழிசை உலகில் பெரும் சாதனைகளாகவே கருதக்கூடிய நூல்களாகும். அன்றியும் கணனியைப் பயன்படுத்தி ஆரோஹன அவரோஹணங்களை வரைவு ஆக வரைந்திருப்பது பழமையிற்புதுமை. இது பாராட்டி வரவேற்க வேண்டியதொன்று. இத்தகைய இசைச் சாதனைகள் புரியும் மஹாவித்துவான், யாழ்ப்பாணம், பிரம்மஸ்ரீ மா.த.ந. வீரமணி, எம்.ஏ. ஐயா அவர்களுக்கு ஸர்வாபீஷ்ட சித்திகளும், தீர்க்காயுஸும் உண்டாக, அருள்மிகு கற்பகாம்பிகா உடனுறை கபாலீச்வரர் பெருமானை வேண்டிப் பிரார்த்திக்கின்றேன். இன்று வெளியாகும் இந்த நூல்களையும் வாழ்த்துகிறேன்.

"சுபம்"

இங்ஙனம்

அன்புடன்

அருள்மிகு கபாலீஸ்வரர் தேவஸ்தான
பிரதம சிவாச்சாரியார்

(சிவஸ்ரீ எஸ். சாம்பமூர்த்தி சிவாச்சாரியார்)

அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயில்
திருமயிலை, சென்னை - 600 001.

Sangeetha Kalanidhi, Sangeetha Choodamani,
Kalaimamani Sangeetha Kala Nipuna,
Isai Chelvam,
Nada Brahmam



## Tanjavur M. Thyagarajan

Date :

இலங்கை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இணுவில் ப்ருஹ்ம்ம ஸ்ரீ **என். வீரமணி** அய்யர் அவர்கள் இயற்றியுள்ள 72 மேளக்கர்த்தாராக திரு. மயிலை கற்பகாம்பாள் கீர்த்தனைகளை பார்த்தேன். மிகவும் போற்றக்கூடிய அளவில் அமைந்திருக்கின்றன. இதைத்தவிர 35 தாளத்திருமயிலைக் கீர்த்தனைகளும், திருமயிலை கீர்த்தனைகள், பதங்கள் ஆகிய இரண்டு நூல்களையும் பார்த்தேன். அத்துடன் 175 தாள திருமயிலை கீர்த்தனைகளை பார்த்தேன். பாடியும் கேட்டேன். இவருக்கு மேன்மேலும் பல கீர்த்தனைகள், பாடல்கள் இயற்றும் வல்லமையை அருள்மிகு கற்பகாம்பாள் அளிக்க வேண்டும் என்று ப்ரார்த்திக்கிறேன்.

இப்படிக்கு
**T.M. தியாகராஜன்**

3/12, G.S. Sushil Flats, Ramachandra Road,
Mylapore, Chennai - 4. Tel. : 24982331

© : 4911432



# NATHAN FINE ARTS ACADEMY

(Regd. No. 798)
B-7, RAGAMALIKA APARTMENTS, JEEVARATNAM NAGAR,
ADYAR, CHENNAI - 600 020.

Date : 13.12.2002

**யாழ் இணுவில் *வீரமணி* ஐயா அவர்களைப் பற்றி எதை எழுதுவது ?**

நம் குற்றாலம் நீர்வீழ்ச்சி சிலகாலம் வற்றிவிடும், இவரது கீர்த்தனைகளில் கற்பனை நீர்வீழ்ச்சி வற்றாது. இலங்கையில் புராண நாட்டிய நாடகமா? இவரது கீர்த்தனைகளில் தெளிந்த நீரோடையாக தெரியும். நான் வேடிக்கையாக சொன்ன, 7,35,175 தாளங்களை வினோதப்படுத்தி லயமேதைகள் உள்ளத்தில் தமிழ் குடிபுகுந்து விட்டார். நினைக்கமுடியாத சாதனை. தமிழ் பேசும் உலகத்தில் நடைபெறும் நாட்டிய நாடகங்களில் இவரது உயர் கவிதை அழகு தெரியும் நாள், வெகு தூரத்தில் இல்லை.

(வாழ்க ! வளர்க !)
வீரமணி ஐயா

இப்படிக்கு

**A.S. ராமநாதன்**
யாழ் / ராமநாதன் அகாடமி
முன்னாள் மிருதங்க பேராசிரியன்



உ

ஓம் சிவாயநம

## "கான கலாதர"
## ஸ்ரீ வீரமணி அய்யர்

தெள்ளுதமிழ் தேர்ந்து **கற்பக வல்லி**க்குத்
தேனாய் **வீரமணி** தொடுத்தார் பாமாலை.

வள்ளல்தம் செல்வம்போல் வற்றாத தமிழ் ஊற்று -
நெஞ்சை

அள்ளுதே 'தெய்வமகன்' வாழ்க பல்லாண்டு !

**மயிலை**வளர் அன்னையின் அருளால் மதுரம்சேர்
எழுபத்திரண்டுமேள ராககீர்த்தனைகள்
மயிலன்ன தாயவட்கு முப்பத்தைந்து தாளத்தில்
முக்கனிச் சாறன்ன கீர்த்தனைகள் இன்னும்

நூற்றிஎழுபத் தைந்து தாளத்தில் கீர்த்தனைகள்
நுண்மாண் நுழைபுலம் துலங்கவே படைத்தளித்தான்
போற்றிடுவோம் புதுமைபடைத்த புலவோனை
புகழ்ந்திடுவோம் பூரண வாழ்வுக்காய் வேண்டிடுவோம்


**கற்பக வல்லி**யின் பொற்பதம் பற்றிய
**'கானகலாதரன்' வீரமணி அய்யர்**
அற்புதமான தெய்வப் பாமாலை அருளினான்
அன்னையின் அருளமுதம் அன்னவர்க்காகுவே !

**நல்லைக்குமரன்**

26.12.2002

E103/C, 17th Cross Street,
Besant Nagar,
Chennai - 600 090.

உ.



பண்ணிசைக் கலாநிதி சங்கீத வித்வான் பேராசிரியர் எஸ்.கே. சிவபாலன், விரிவுரையாளர், நுண்கலைப்புலம், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், சிதம்பரம். முன்னாள் இசையாசிரியர் பயிற்சித்துறைத் தலைவர், இசைத்துறை, அரசு இசைக் கல்லூரி, சென்னை - 600 028. இயக்குநர், இசைக்கோயில், அடையாறு, சென்னை - 600 020.

(தமிழக அரசின் சிறந்த நூலாசிரியர் விருது பெற்றவர்)

## வாழ்த்துரை

ஒன்றாய் அரும்பிப் பலவாய் விரிந்து இவ்வுலகெங்கினும் பரந்து நிற்கும் கற்பகத் தாயாகிய அம்பிகையின் பெருமைகளை, இசைத் தமிழ்ப் பாவால் நயம்பட வடித்திருக்கின்றார் நம் ஈழத்தைச் சார்ந்த மஹா வித்துவான் பிரம்மஸ்ரீ மா.த.ந. வீரமணி ஐயர் அவர்கள். இளமையிலேயே இசைநயமும், கவிநயமும் வாய்க்கப் பெற்றவரான ஐயர் அவர்கள் இயற்றிய தீந்தமிழ்க் கீர்த்தனைகள் எண்ணிலடங்காதவை. இவரது கீர்த்தனைகளில் இசையும், சொல்லும் பொருளும் ஒன்றையொன்று விஞ்சிகளி நடம் புரிவதைக் காணலாம்.

கிருதி, கீர்த்தனை என்ற இசை வடிவங்களின் மிக எளிமையான வடிவம் கீர்த்தனையாகும். கீர்த்தனைக்குரிய அத்தனை அம்சங்களும் இவர் யாத்த பாடல்களில்

அமைந்திருப்பது இவரை ஒரு சிறந்த இயலிசையாளர் (வாக்கேயக்காரர்) வரிசைக்கு உயர்த்துகின்றது எனலாம்.

'சுருதி மாதா, லயம் பிதா' என்னும் இசைப் பழமொழிக்கு ஏற்ப, வளமான தமிழ் இசைப் பாடல்களைப் பல்வகை தாளங்களில் அமைத்துப் பாடியருப்பது, 72 மேள கர்த்தா கீர்த்தனைகள், 35 தாளக் கீர்த்தனைகள், 175 தாளக் கீர்த்தனைகள், ஐயா அவர்களின் வளமான இசை நுண்மாண் நுழைபுலத்தை வெளிப்படுத்திக் காட்டுகின்றது. ஐயா அவர்களை நான் மாணவராக இருந்த காலத்திலிருந்தே நன்கறிவேன். எல்லோரிடத்திலும் மிகுந்த அன்பும், பக்தியும், எளிமையும் மிக்கவர்.

திரு. பாபநாசம் சிவன் அவர்களுக்குப் பின்பு, ஈழத்தில் ஒரு இசையியலாளர் தோன்றியிருப்பது எம்மனோர்க்குப் பெருமையாகும். இசையியலாளர் வரிசையின் வைத்து எண்ணப்படும் தகைமை வாய்ந்த ஐயா அவர்கள் இயற்றிய, 'திருமயிலைக் கீர்த்தனைகள் பதங்கள்' தமிழ் இசை, உலகிற்குப் புது வரவாகும். இந்நூலிற்கு வாழ்த்துரை வழங்குவதில் பெரு மகிழ்வு எய்துகின்றேன். ஐயா அவர்கள் எல்லா நலன்களும் பெற வேண்டி, எல்லாம்வல்ல ஆடல் வல்லானை இறைஞ்சி அமைகின்றேன்.

*'ஆயகலைகளைப் பேணி வளர்த்திட*
*ஆக்கலும் வேண்டும் ஆய்தலும் வேண்டும்'*

இவ்வனம்
அன்பன்
**எஸ்.கே. சிவபாலன்**

'இசைக்கோயில்'
20, காமராஜ் அவென்யூ,
அடையாறு, சென்னை - 20.

29.12.2002

# 1. திருமயிலைக்
## கூத்தாடு விநாயகர் ஸ்துதி

ராகம் : நாட்டை

தாளம் : ஆதி

**பல்லவி**

**விநாயகனே** சரணம் - சரணம்
அநாதரக்ஷகா ஆனந்தக் **கூத்தாடு**

**அனுபல்லவி**

அநாதியாதியாய் அமைந்த பிரணவமே
எனாளும் அருள்தந்து எங்களைக் காத்திடுவாய் !

**சரணம்**

கூத்தாடும் மாமயில்கள் கொண்டல்முழங்கும் கடல்
கூத்தாடும் கரைக்கவின் கொண்ட **மயிலை** தண்ணில்
கூத்தாடும் உன்புகழைக் கொண்டே தமிழிற் பாடிக்
கூத்தாடும் தெய்வமுனைக் கொண்டேத்த அருள்வாயே !

## 2. சிங்காரவேலவன்

ராகம் : ஷண்முகப்பிரியா
தாளம் : ஆதி

பல்லவி

**சிங்கார வேலவனை** சிவசக்தி பாலகனை
கொண்டாடிப் பாடிடுவோம் - வாரீர் !

அனுபல்லவி

பொங்கேழுஸ்வரகானம் பொலியும் **மயிலையிலே**
வங்காரப்பவனிவர வாத்தியங்கள் முழங்கும்

சரணம்

வேல் ஏந்தியே எங்கள் வினையெல்லாம் கொல்வான்
மால்மருகன் செந்தமிழ் மழலைகள் சொல்வான்
வேல்முருகன் குமரன் காலபயம் வெல்வான்
நால்வேதமும் புகழும் நன்**மயிலைச் சிங்காரன்**

# 3. மந்திர மாமயிலை மன்னும்குகன்

பதம்

ராகம் : காபி

தாளம் : ஆதி

**பல்லவி**

வாமுருகா என்று கூவு - குயிலே

வள்ளி மணாளனை புள்ளி மயில் மீதில்

**அனுபல்லவி**

காமுறுமென் நெஞ்சம் கந்தனைக் காணாமல்

வேதனையால் நொந்து வேகுதேயெனச் சொல்லி

**சரணம்**

மந்திர **மாமயிலை**மன்னும் குகன் என்னிடம்

வந்திடுவான் இன்பம் தந்திடுவான் அந்தச்

சுந்தரன் ஷண்முகனை **சிங்கார வேலவனை**

விந்தைமா மயிலேறி விரைந்து பறந்தோடி

# 4. என் தெய்வம்

ராகம் : கரஹரப்ரியா
தாளம் : ஆதி

பல்லவி

கேட்டதெல்லாம் கொடுக்கும் தெய்வம் - மனம்
நாடித்துதித் தென்றும் பாடி வணங்கிட நாம்

அநுபல்லவி

வாட்டமெல்லாம் அகற்றி வாழ்வு தந்தேயடியார்
கூட்டமெல்லாம் தழைக்க கொள்ளையின்பம் அனைத்தும்

சரணம்

கற்பகமாய் விளங்கும் **கற்பகவல்லி**யவள்
பொற்பதியாம் **மயிலா புரி**யினில் உறைபவள்
தற்பரராம் கபாலி தனையணைத்திடுபவள்
நற்கழல் கள்பிடித்தால் நானிலவாழ்வினிலே

# 5. என்னைப் பெற்றவள் நீயன்றோ !

**ராகம் : ரஞ்ஜனி**
**தாளம் : ஆதி**

**பல்லவி**

உற்றவர் யாருமிலேன் - என்னைப்
பெற்றவள் நீயல்லவோ ? தாயே !

**அனுபல்லவி**

**கற்பகமே மயிலைக் கபாலீச்சுவரன்** மருவும்
அற்புதச் சித்திரமே அவனியிலே எனக்கு

**சரணம்**

செஞ்சிலம்பும் தண்டையும்
சேர்ந்து குலுங்கிடும் நற்
கஞ்சமலரடிகள் தஞ்சமென நம்பினேன்
ரஞ்ஜனி நிரஞ்ஜனி கஞ்ச தளாய தாக்ஷி
அஞ்சலென்றெனக் கென்றும்
அபயமருளும் அம்மா !

# 6. அவரைக் குறை சொல்ல என்மனம் ஏவாதடி !

ராகம் : பெஹாக்
தாளம் : ஆதி

### பல்லவி

என்ன இருந்தாலும் அவரைக் குறை சொல்ல
என் மனம் ஏவாதடி - ஸகியே !

### அனுபல்லவி

மன்னன் **கபாலீச்வரன் மாமயிலைக்** கதிபன்
சொன்னபோது வராமல் சோதனை செய்தபோதும்

### சரணம்

1. பித்தனைப் போலலைந்து பிச்சையெடுத்தாலும்
சித்தனைப்போல என்றும் சிவபோதம் சொன்னாலும்
நித்தமெனைமறந்து பக்தரிடம் போனாலும்
இத்தனைக்கும் அவரை இடித்துரைத்தல் ஞாயமோ?

2. கட்டியபெண் நானிருக்கக் **கற்பகவல்லி**யெனும்
கட்டழகி மயக்கக் கட்டுக் கடங்குகிறார் !
விட்டுப் பிரிந்தவரால் வேதனை கொண்டபோதும்
மட்டுப்படுத்தலாமோ? மணவாளனவனன்றோ?

# 7. மன்னன் மயிலைநாதன் மஹிமை

ராகம் : கல்யாணி

தாளம் : ஆதி

பல்லவி

என்ன இனிமையடி? - எங்கள்
கன்னல் தமிழ்முதக் கனியைச் சுவைத்திடவே

அனுபல்லவி

மன்னன் **மயிலை**நாதன் மகிமையுடன் புகழைப்
பன்னலும் பனுவலும் பாக்களும்தான் சுவைக்க

சரணம்

திருவாசகம் எனும்தேன் தெவிட்டாதினிக்கும்
திருப்புகழாமமிர்தம் தின்னத்தின்னச் சுவைக்கும்
திருக்குறள் கனியமுதம் தித்திக்கும் எத்திக்கும்
பெருமைத் தமிழ்க்கவிதை பசித்துப் புசித்திடவே.

# 8. எல்லாம் உன் செயல்

ராகம் : தன்யாஸி
தாளம் : ஆதி

### பல்லவி

எல்லாம் உன்செயல் என்றுனை நம்பினேன்
நல்லாசிகள் எனக்கு நல்குவாய் ஈசனே !

### அனுபல்லவி

பொல்லாவினைகள் போக்கிப் புகலிடம் தந்தருள்
வல்லானே வள**மயிலை** வளர்**கபாலீச்வர**னே

### சரணம்

ஞானசம்பந்தன் உனைநாளும் புகழ்ந்தே இசைக்
கானமழை பொழிய மோனமாயருள் செய்தாய் !
வானவர்களும் போற்றும் **மாமயிலை**க் கிறைவா !
மோன**மயிலை** நாதா மோஹனப் பதம்பிடித்தேன்.

# 9. பண்முறை

## அறிந்துன்னைப் பாடவருள்

**ராகம் : ஷண்முகப்பிரியா**

**தாளம் : ஆதி**

**பல்லவி**

பண்முறை யறிந்துன்னைப் பாடவருள் செய்வாய்
சண்முகனே குஹனே சற்குருவே செந்தமிழ்

**அநுபல்லவி**

நண்ணியுன் பாதமலர் நாடினேன் ஆண்டருள்வாய் !
மண்ணிலப் புகழ்**மயிலை** மன்னும் **சிங்காரவேலா** !

**சரணம்**

செந்தமிழ் தெய்வமென்று செகத்தவர் போற்றுகின்ற
அந்த நற்தெய்வம் நீயே அழகுதமிழ் தந்தாயே !
நந்தமிழ் இன்னிசையில் நலமுற உன்புகழை
வந்தனை செய்து நிதம் தந்துனை வாழ்த்திடவே !

# 10. செந்தமிழ் மயிலையின் கந்தன்

பதம்

ராகம் : தேஷ்
தாளம் : ஆதி

பல்லவி

சுந்தர**வேலவன்** வந்திடுவாரடி !
அந்தரங்கம் சொல்லிநான் அணைத்திடுவேனடி !

அனுபல்லவி

தந்திரமாய் என்னைத் தாவிப்பிடித்திடுவான்
சந்திரமுகமதனில் கந்தனே தந்திடுவான்

சரணம்

வந்ததும் அவன்பாத மலரின் மலர்தூவி
வந்தனை செய்திடுவேன் வருவடி வேலருக்கு
சந்தணம் பூசிடுவேன் ஷண்முக னுக்கினிய
கந்தம் கமழும் நல்ல கடம்ப மலரணிவேன்
சிந்தனைக்குமினிய செந்தமிழ் **மயிலை**யின்
கந்தனைப்பாடியே நற்களிப்புறச் செய்திடுவேன்
விந்தை மயிலின் மீது விளையாடும் ஆறுமுகன்
சிந்தை குளிர்ந்திடவே எந்தனைக் கைப்பிடிக்க

# 11. மாமயிலைச் சிங்காரன்

நிந்தாஸ்துதி

ராகம் : மத்தியமாவதி
தாளம் : ஆதி

**பல்லவி**

எள்ளி நகையாடுதே - உலகம்
புள்ளி மயில்வேலன் புரிந்திட்ட செய்கைதனை

**அநுபல்லவி**

புள்ளினம் ஓட்டியே புதுத்தினைப்புனத்தில்
வள்ளிக்குறத்தி தன்னை வதுவை செய்ததை எண்ண

**சரணம்**

மானைத் தொடர்ந்து வந்தான் மங்கையவளைக்கண்டு
தானே தன்னை மறந்தான் தேனே வந்தேனே என்றான்
வானை நிகர்த்த வேங்கை வளர்தருவுருக்கொண்டான்
கூனைக்குனிந்து கொண்டு கூக்குரலிட்டதெல்லாம்

அண்ணனைக் கூவிநின்றான் ஆனையுருவாக்கினான்
பண்ணிசையாலவனின் பருவம் புகழ்ந்து நின்றான்
பெண்ணவளை மயக்கித் தன்னவளாக்கி விட்டான்
மண்ணதில் **சிங்காரன் மாமயிலை** வேலனை.

# 12. கூடிக்குலாவிட ஓடி வருவானோ ?

பதம்

ராகம் : சங்கராபரணம்
தாளம் : ஆதி

பல்லவி

எங்கள் முருகனுக்கேற்றவளோ இவள்
நங்கையே நீ சொல்லடி - அடி
மங்கையே நீ சொல்லடி

அனுபல்லவி

பங்கயக் கண்களோ தங்கமாம் அங்கமோ ?
திங்கள் வதனமோ பொங்கு கொங்கைகளோ ?

சரணம்

கோடி மதன்பலர் கூடி நின்றாலும் எம்
குமரனழகுக் கிணையாகுமோடி ?
போடியவன் பாததுளிக்கு நில்லாத
பெண்ணவனுக்குத் துணையாகுமோடி ?
சூடிமலரணி சுப்பிரமணியன் பதம்
நாடி மனமகிழ் நாரியிவள்தானோ ?
மாடிமனைநிறை **மாமயிலை வேலன்**
கூடிக்குலாவிட ஓடிவருவானோ?

# 13. புகலிடம் இல்லையம்மா !

ராகம் : பரசு
தாளம் : ஆதி

### பல்லவி

புகலிடம் இல்லையம்மா ! - உன்றன்
கழலடியன்றியிந்த இகமதிலே எனக்கு

### அனுபல்லவி

அகமதிலே பொங்கி அலையெழும் கடலெனும்
ஆறுதலில்லா மனம் தேறுதலை நாடிடப்

### சரணம்

சங்கரியே சிவசக்தி சாம்பவி நித்திய
மங்களரூபியே **மாமயிலையில்** வாழும்
பங்கயக்கண்ணழகி பாவையே **கற்பகமே !**
தங்கச் சிலம்பணியும் தாமரைப் பதமின்றிப்

# 14. அன்பின் உருவம்

ராகம் : பெஹாக்
தாளம் : ஆதி

**பல்லவி**

அன்பே உருவான **கற்பகமே** - தாயே
நின்பால் சரணடைந்தேன்
நீயருள்வாய் பொற்பதமே !

**அனுபல்லவி**

இன்பநற்ஸௌந்தர்ய லஹரி நீயே - அம்மா
உன்பதமன்றி இந்த உலகில் துணைவுளதோ ?

**சரணம்**

திருஞான சம்பந்தன் சீர்காழிக் குளக்கரையில்
பெருகிக் கண்ணீர் சொரிந்து, அழுதிட நீயும் வந்தாய்
திருவடி வேண்டி நிதம்தாய் நின்சேய் கதறி
ஒருவருமில்லையென்றேன் ஓடோடி வாராயோ ?

## 15. இந்த க்ஷணம் கூட்டிவாடி !

### பதம்

ராகம் : திலங்
தாளம் : ஆதி

### பல்லவி

கந்தனிடம் நீ போய் எந்தன்நிலை சொல்லி
இந்த க்ஷணம் கூட்டிவாடி - ஸகியே !

### அனுபல்லவி

சந்தன மணம் கமழச் சாந்துப் பொட்டுத்திகழ
கந்த மலர்கள் சூடிக் கடம்ப மலரணியும்

### சரணம்

அந்திநேரத்தில் வரும் சந்திரிகை எந்தனை
செந்தணலாக்கி உடல் வெந்திடக் காயுதே !
மந்த மாருதமென்னை மயக்கி மனம் வருத்தி
மையலனனை மூட்டி மாய்த்திட வீசுதே !
சுந்தர மன்மதன் எந்தனை நோக்கி எய்யும்
சுரும்பு மலரம்புகள் சுருக்கெனப் பாயுதே !
செந்தமிழ்வேலவன் விந்தை மயிலின்மீது
வந்தணைந்து சுகம் தந்திட **மயிலைக்.**

# 16. மருவியதை எண்ணி உருகுதடி !

பதம்

ராகம் : பீம்பிளாஸ்

தாளம் : ஆதி

பல்லவி

மருவியதை எண்ணி உருகுதடி - மனம்
திருவிளையாடல் செய்து திருமயிலைக் கபாலி

அனுபல்லவி

கருவிழிக்காந்தன் என்னைக்
கண்டதுமே மயக்கி
அருகிலணைத்து என்றன்
அதரக் கனி சுவைத்து

சரணம்

கமல மலர் முகத்தைக் கண்டு களித்து நின்றான்
கட்டழகு நிறைந்த கற்பகவல்லியென்றான்
நிமலவன் வந்தென் நெஞ்சம் கவர்ந்து வென்றான்
நீணிலத்தில் தெய்வக் காதலைத் தந்து சென்றான்.

# 17. செந்தமிழ்ப் பாவலர்கள்

## பாடிப் புகழும் கந்தன்

**பதம்**

**ராகம் : வசந்த**
**தாளம் : ஆதி**

**பல்லவி**

எந்தனுக்கே சொல்லடி - **மயிலைக்**
கந்தனுக்கு முனக்கும் சொந்த முண்டாயிருந்தால்

**அனுபல்லவி**

உந்தனுக்கேற்றதோர் உத்தமன்தானடி !
வந்தவன் உன்னையே வதுவை செய்திடுவானோ?

**சரணம்**

செந்தமிழ்ந் தேனருந்தும்
 செவ்விதழ் வேலன் காதல்
தந்திடுவானோ இங்கு
 வந்திடுவானோ நித்தம்
பைந்தமிழ்ப் பாவலர்கள்
 பாடிப் புகழும் கந்தன்
உந்தன் மனம் கவர்ந்து
 உவந்து தந்தானோ காதல்?

# 18. கங்காதரன் மகிழும் கார்த்திகேயன்

**ராகம் : ஹம்ஸநாதம்**

**தாளம் : ஆதி**

**பல்லவி**

**சிங்கார வேலவனை** சிந்தித்துத் துதிப்போர்க்கு
தங்காது ஊழ்வினையே - **மயிலைவளர்**

**அனுபல்லவி**

கங்காதரன் மகிழும் கார்த்திகேயன் கடம்பன்
மங்காத வாழ்வுதரும் மகிபன் அருட்கதிபன்

**சரணம்**

சரவண பவ னெனும் சற்குணன் அற்புதன்
உரக சயனனவன் உவந்த மருகன்குகன்
விரகமுறு மடியார் விளைகளை நீக்குபவன்
வரமருளும் வரதன் வள்ளிக்குஞ்சரி லோலன்.

# 19. வேல் கொண்டு மால்மருகன் வந்தான் !

ராகம் : ஸிந்துபைரவி

தாளம் : ஆதி

### பல்லவி

வேல் கொண்டு மால்மருகன் வந்தான் என்றன்
வினையோடத் திருவருளைத் தந்தான் கந்தன்

### அநுபல்லவி

நால்வேதமும் புகழும் நகர் **மயிலாபுரி**யில்
கோலகல முருகன் சீராய் மயிலின்மீது

### சரணம்

சேவற்கொடி பறக்க செந்தூரப் பொட்டிலங்க
வாவாவெனவே தொண்டர் வாயார வாழ்த்தி நிற்க
ஆவல்ததும்ப நெஞ்சம் அணங்காமிருவருடன்
ஆனந்தமான தமிழ்க் கானந்தனையிசைத்து

# 20. இரந்துண்டு வாழலாமோ ?

ராகம் : நாதநாமக்ரியா
தாளம் : ஆதி

### பல்லவி

இரந்துண்டு வாழலாமோ ? - ஐயாவுமக்கு
இழுக்கென்பது அறியீரோ ? - கபாலமேந்தி

### அனுபல்லவி

பரம்பரை ஆண்டியோ பஞ்சத்துப் பிச்சாண்டியோ ?
பிரம்படிபட்டு நித்தம் பிச்சை எடுத்தலைந்து ?

### சரணம்

உடுக்கக் கரிப்புலித்தோல் உடையணிந்திடுகிறீர் !
படுக்க நிழலுமின்றி பனைக்காட்டை அடைகிறீர் !
உடுக்கும் நெருப்புமேந்தி உவந்து களித்தாடுகிறீர் !
வடுக்கள் மறைந்திடுமோ ? **மயிலைக்கபாலீசரே ?**

# 21. "சிவாய நம"

ராகம் : பிலஹரி
தாளம் : ஆதி

### பல்லவி

**கபாலியே** கண்பாராய் - எனக்
கபாயம் இல்லாது காத்தருள் தாராய்

### அனுபல்லவி

சிவாய நமவென்று சிந்தித்து வந்திக்கும்
உபாய மனைத்தையும் உணர்த்தி அருள்செய்ய

### சரணம்

**கற்பகக்** கன்னிமயில் காதல் புரியவந்த
சிற்பரனே சிவனே சேவடியே சரணம்
நற்பதம் தந்தென்னை நல்லவனாக்கியருள்
பொற்பதியாம் **மயிலா** புரியிலுறைபவனே

# 22. வேலும் மயிலும் துணை

ராகம் : சங்கராபரணம்
தாளம் : ஆதி

பல்லவி

"**வேலும் மயிலும் துணை**" - ஒருக்
காலும் பாவமணுகாது காக்கும்வடி

அனுபல்லவி

மாலும்மகிழ் மருகன் வேல்முருகன் குமரன்
நாலுவேதம் புகழும் நன்**மயிலைச் சிங்கார**

சரணம்

பன்னிருகையனவன் பரிந்திடும் அன்பருக்கு
தன்னொரு கையாலே தந்திடுவான் அபயம்
நன் முருகையன் குகன் நற்குறவள்ளிலோலன்
சென்னியில் பதம் வைபபான் ஜெகத்தில் என்றுமெனக்கு

# 23. எப்படிச் சொல்வேனடி ?

## பதம்

ராகம் : கானடா
தாளம் : ஆதி

### பல்லவி

**எப்படிச் சொல்வேனடி ? - முருகன்**
செப்படிவித்தையெல்லாம் செய்ததை நானுனக்கு

### அனுபல்லவி

அப்பனுக்கே புத்தி செப்பியவேலன் செய்த
ஒப்புவமையில்லாத தப்பிலித்தனத்தையெல்லாம்

### சரணம்

தெப்பக் குளத்தினிலே தெளிந்த நன்நீரெடுத்தேன்
அப்போ தென்னை அணைத்து அதரம் சுவைத்தானடி !
தப்ப வழியறியேன் தத்தளித்தேன் குமரன்
எப்படியோ மயக்கி என்மனம் கொண்டதெல்லாம்

பக்கத்தில் வந்தென்னை பரிகாசம் பண்ணி நின்றான்
வெக்கப்படாதே பெண்ணே வேறல்லத்தான் என்றான்
துக்கமெல்லாம் மறந்தேன் துயர்களையும் துறந்தேன்
தக்க **மயிலைவாசன்** தான் புரிந்திட்டதெல்லாம்.

# 24. வருவாரோ நீ சொல்லடி ?

பதம்

ராகம் : காமாஸ்
தாளம் : ஆதி

பல்லவி

**வருவாரோ நீ சொல்லடி** - எந்தன்
இருதோள் பொருந்த என்னை மருவாரோ ஈசரிங்கு

அனுபல்லவி

திருவூரும் **மயிலையின்** பெருமான் **கபாலீச்வரன்**
திருமாலும் பிரமாவும் அறியாத உருவோடு

சரணம்

செங்கையில் வளைகள்சோருதே - காலின்
சிலம்பும் கழன்று வீழுதே - மெலிந்து
அங்கமெல்லாம் மிக நோகுதே - என்றன்
திங்கள் முகம் மிக வாடுதே - எங்கும்
பங்கயக் கண்களோ தேடுதே - பார்த்து
பார்த்து மனமும் மாயுதே - காதல்
பொங்குதே மன மஞ்சுதே - மையல்மிஞ்சுதே
இனியென் செய்வேனடி ?

## 25. சொன்னதெல்லாம் சொல்லுவாயோ?

பதம்

ராகம் : காபி
தாளம் : ஆதி

பல்லவி

**சொன்னதெல்லாம் சொல்வாயோ ?** கிளியே
மன்னன் **கபாலி**யிடம் மறக்காமல் நானுனக்கு

அனுபல்லவி

புன்னைவனத்தில் காதல் புரிந்திட்டபோது அன்று
என்னைமறவேனென்று என்கரம்தொட்டு ஆணை

சரணம்

கண்ணெடுத்தும் ஒரு பெண்ணையும் பாரேன் என்று
**கபாலி** சொன்னரெனக்கு நித்தம் - ஆனால்
பெண்ணொருத்தி தலையில் என்னொருத்தியுடலின்
பொருந்தும்படி கொடுத்தார் முத்தம் - இனி
மண்ணதில் மாதுவெனை மணஞ்செய்து மகிழ்ந்திட
**மயிலை**யில் நாடுமோ அவர்சித்தம் ? - நெற்றிக்
கண்ணதில் கனலெழுப்பிக் காமனை எரித்தவர்க்கு
காமச் செயலிதுவோ சுத்தம் - என்று

# 26. இடர் இல்லை

ராகம் : அடாணா
தாளம் : ஆதி

## பல்லவி

**என்றுமிடர் இல்லையே** - தினம்
நன்று மிளிர்**மயிலை** நாதனைத் துதித்திட

## அனுபல்லவி

கன்று குரல்கேட்டுக் கனிந்திடும் நற்பசுபோல்
நன்கு கனியும் எங்கள் நற்**கபாலி**யிருக்க

## சரணம்

அன்புருவானவன் அருள்வடிவானவன்
இன்புற யாவரும் இறையருள் தருபவன்
துன்புறுவார்துயர் துடைத்திடும் தூயவன்
நன்புகழ்பாடியே நற்பதங்கள் துதித்தால்

# 27. வீறுடையான் !

ராகம் : கீரவாணி
தாளம் : ஆதி

### பல்லவி

இக்கணமே வருவான் - வந்தென்
துக்கமெல்லாம் துடைப்பான் **கந்தன்**

### அநுபல்லவி

முக்கண்ணனின் புதல்வன் முருகன் வேதமுதல்வன்
எக்கணமும் மறவான் என்னையாட் கொள்ளும் குகன்

### சரணம்

வீறுடையான் வடிவேலுடையான் ஆறு
வீடுடையான் தவவிண்ணுடையான் திரு
நீறுடையான் அன்பர் நெஞ்சுடையான் மயில்
மீதினிலே **மயிலை** வாசன் **சிங்காரவேலன்**

# 28. ஆறுதல் நின்னையன்றி ஆரையா!

ராகம் : ஸிம்மேந்திரமத்யமம்
தாளம் : ஆதி

### பல்லவி

**ஆறுதல் நின்னையன்றி ஆரையா - முருகா !**
ஆறுதல் நின்னையன்றி ஆரையா - எனக்கு
ஆறுமுகனே வடிவேலையா எனக்கு

### அநுபல்லவி

கூறுமடியார் வினை தீர்க்குமையா மெய்யா !
ஏறுமயில் மீதினில் ஏறிவா குமரையா !

### சரணம்

பன்னிருகையா பாலசுப்பிரமணியா !
உன்னிருமலர்ப்பாதம் உலகினில் துணை ஐயா !
நன்முருகையா என்முகம் பாரையா !
என்னையாளையா எழில் **மயிலை**யின்துய்யா

# 29. கால பயமில்லை

ராகம் : ஆரபி
தாளம் : ஆதி

### பல்லவி

பாலசுப்பிரமணியன் பாதம் பணிபவர்க்கே
காலபயமில்லையே - **திருமயிலை**

### அனுபல்லவி

நீல மயிலின்மீது கோலாகலமாய் இரு
வாலைக்குமரியோடு லீலை செய்யும் **சிங்காரன்**

### சரணம்

அருளருவி பாயுமே **ஆனந்தம் பொழியுமே !**
வருவினைகள் அனைத்தும் மாய்ந்து மடிந்திடுமே !
இருளது நீங்கிடுமே இன்பமும் பொங்கிடுமே !
இனியவன் கனியவன் திருமுருகன் குமரன்.

# 30. கருணையருள்

ராகம் : பூபாளம்
தாளம் : ஆதி

## பல்லவி

**கா... பா... லி** கழலடியிணையே
நிழலெனும் துணையாம் கருணையருள் **மயிலைக்**

## அனுபல்லவி

பூ... பா... லர் புகழுந் **திருமயிலை**
வளரும் **கற்பகக்** கொடி மருவி நிதம்படரும்

## சரணம்

புன்னைவனத்திடையே புனிதமலரெடுத்து
அன்னையுமையவளும் அன்றேத்த அருள்
தன்னையருளியின்பம் தந்து தரணியர்க்கும்
சென்னை நகரிருந்து செம்மை அறம் வளர்க்கும்

# 31. பொற்பதங்கள் துணை

ராகம் : ரீதிகௌள

தாளம் : ஆதி

பல்லவி

**பொற்பதங்கள் துணையே** - இந்த
அற்பன் எனக்கருளக் **கற்பக வல்லி**யுன்றன்

அனுபல்லவி

தற்பரராய் **மயிலை** தனில்வாழும் தயாபரர்
அற்புதமாய் ஒன்றாய் அணைக்கும் அம்பிகேயுன்றன்

சரணம்

கற்பனைக்கும் கடந்த சிற்பரையே ! சரணம்
நற்பதவிகள் நல்கும் நாயகியே சரணம்
வெற்பரையன் மகளுன் விரைகழலே சரணம்
உற்பவமானவர்க்கு உறுதிதருமுன்னிரு

# 32. சிவகுரு !

ராகம் : ஷண்முகப்ரியா
தாளம் : ஆதி

### பல்லவி

அப்பனே முருகா ஆறுமுகா குஹா !
எப்படியுன்னருள் எழில்தனைப் போற்றுவேன் ?

### அனுபல்லவி

செப்பும் அருணகிரி செந்தமிழ்த்தேன் பருகி
அற்புதத்திருப்புகள் மணியணியும் மணியே !

### சரணம்

அருள்வடிவே சிவகுரு வடிவே வேதப்
பொருள்வடிவே ஞானக் கதிர்வடி வேலவனே !
இருள்சேர்வினையகற்றி இடர்களைப்போக்கி புகழ்
**திருமயிலைலுறைந் தருளும் சிங்காரவேலா**

# 33. என்ன நான் செய்வேனடி ?

பதம்

ராகம் : தன்யாசி
தாளம் : ஆதி

### பல்லவி

என்னதான் சொன்னாலும் ஒருதடியிவர்க்கு
என்னநான் செய்வேனடி ? - ஸகியே !

### அனுபல்லவி

கன்னல் தமிழ் **மயிலை** காக்கும் **கபாலி** என்றன்
கன்னம் சிவக்க முத்தம் கனிந்தளிக்கும் போதிலும்

### சரணம்

ஆடும் அரவம் எல்லாமவர் பிடித்தணிகிறார் !
அம்புலியைத் தனது செஞ்சடையில் சூடுகிறார் !
வீடுமில்லாமல் சுடுகாடுதனில் களிப்பார் !
விபூதியென்று வெறும் சாம்பல்தனைப் பூசுவார் !
பாடும் அடியவர்க்கு பரிந்தன்பு காட்டுகிறார் !
பக்திபண்ணுபவர்க்காய் நித்தியமும் திரிவார் !
கூடும் மனைவியையோ குழந்தைகளையெண்ணாமல்
கூடாத கூட்டமெல்லாம் கூடியலைந்திடுகிறார் !

பிட்டுக்கு ஆசைப்பட்டுப் பிரம்படி படுகிறார் !
பித்தனாய் ஓடேந்தியே பிச்சையெடுத்திடுகிறார் !
பட்டுடையும் வெறுத்துப் பசும்புலித்தோலுடுப்பார் !
பாற்கடலில் விஷத்தை பலரறிய உண்ணுவார் !
கட்டு விறகு விற்று கண்ணிய மிழக்கின்றார் !
காண்டீபனடித்திடக் கண்ணப்பன் உதைக்கின்றான் !
விட்டுப்பிரிந்திட்டாலும் வீட்டை மறந்திட்டாலும்
விதியோ முன் செய்த வினைச் சதியோ இதென் கதியோ?

# 34. வேதனை மீறுதடி !

பதம்

ராகம் : சுபபந்துவராளி
தாளம் : ரூபகம்

பல்லவி

வேதனை மீறுதடி - ஸகியே
போதனை போதுமடி மன

அநுபல்லவி

சோதனையோ வாழ்வில் ஆதரவான என்
நாதனைக்காணாத காதல் நெஞ்சம் படும்

சரணம்

நெஞ்சக்கனகல்லு நெகிழ்ந்தே யுருகாதோ ?
தஞ்சமெனு மெனக் குஅஞ்சல் அருளாரோ ?
வெஞ்சமர் வீரர் விறர் **மயிலை** வாசர்
கஞ்ச மலரடி காணாமல் காணாமல்

# 35. திருவடியிணை துணை

ராகம் : வாசஸ்பதி

தாளம் : ஆதி

### பல்லவி

**திருமயிலாபுரியில் வாழ் சிவனே** - உன்றன்
பெருமைதனைத் தமிழில் போற்றுவனே பரனே

### அநுபல்லவி

ஒரு மயியான உமைக் கருள் செய் கபாலியுன்றான்
திருவடியிணை துணை தருமென நம்பினேன்

### சரணம்

ஓடும் திரிசூலமும் உடுக்கையும் கையிலேந்திச்
சூடும் கங்கையும் பிறை யோடு துலங்கிக்காளை
மாடும் அங்கத்திலொரு பாகம் உமையாய் கூத்து
ஆடும் பெருமானென்னை ஆதரித்தாளுவையே !

# 36. கபாலி அருள் செய்வாயே !

ராகம் : ஹிந்தோளம்
தாளம் : ஆதி

### பல்லவி

பாடியுன்புகழைக் கொண்டாடிக்களித்திடக்க
**பாலி** அருள் செய்வாயே ! - செந்தமிழின்

### அனுபல்லவி

மாடிமனை நிறையும் **மாமயிலா புரியில்**
கூட்டிக்**கற்பகத்**துடன் குலவும் தெய்வமே என்றும்

### சரணம்

தெண்திரைக் கடலது தெறித்தும் புரளும் கரை
தண்தவழ் சோலைமலர் தரும் மணத்தில் மயங்கும்
விண்திருத்தேவரெல்லாம் விரைந்து வந்தென்றுமிந்த
மண்தனில் போற்றுமெங்கள் **மாமயிலை** இறைவா.

# 37. கதிவேறு யாருமிலேன் !

ராகம் : காபி
தாளம் : ஆதி

### பல்லவி

**கதிவேறுயாருமிலேன்** - தாயே !
மதில் சூழும் **மயிலை**யம்பதிவாழும் தயாபரி

### அனுபல்லவி

துதியோடு உனைப்பாடித் துணை நீயேயெனு மென்றன்
விதியோடு விளையாடும் வினையோட அருள்வாயே !

### சரணம்

கெஞ்சியழும் சேயென் மீதில்
கொஞ்சமும் தயவில்லாமல்
வஞ்சியே **கற்பகவல்லி**
மிஞ்சுவது மழகாமோ ?
குஞ்சியழகில் மயங்கி
நஞ்சணி **கபாலியண்ணல்**
கொஞ்சிமகிழ் **கற்பகமே**
தஞ்சமென்றடைந்தேனம்மா !

# 38. வருவாரோ சொல்லடி ?

பதம்

ராகம் : ஹிந்தோளம்
தாளம் : ஆதி

பல்லவி

ஒருகணம் பிரியார் **திருமயிலைக்கபாலி**
**வருவாரோ சொல்லடி** - என்னையணைத்தே
மருவாரோ சொல்லடி - சுகித்தேயென்னை

அனுபல்லவி

அருகணைத்தே அவர் அதரம் கனியமுத்தம்
ஒருகோடி தந்தின்பம் பருகிடுவாரடி !

சரணம்

மாலைமணமும் மலர் மஞ்சமும் குங்குமமும்
சேலையலங்காரமும் செக்கரும் வீணாகுதடி !
பாலைவனமாய் எல்லாம் பார்க்கவே தோன்றுதடி !
சோலைக்கிளியே அவர் சோதனை ஞாயமோடி ?

# 39. மன்னனைக் காணனே !

பதம்

ராகம் : தன்யாஸி
தாளம் : ஆதி

பல்லவி

**அன்னமே என்னுயிர் மன்னனைக் காணனே**
என்னதான் நான் செய்குவேன் ? - இன்னமும்

அனுபல்லவி

நன்னகர் **மயிலையி**ல் மன்னும் **கபாலீச்வரன்**
இன்னலை அகற்றாரோ சொன்னதை மறப்பாரோ ?

சரணம்

பொங்கும் நிலாவனலாய் பொழிவதை யறியாரோ ?
எங்கும் தென்றல் புலிகள் எதிர்ப்பதை தெரியாரோ ?
தங்கும் விரக நோயால் தவிப்பதை யுணரரரோ ?
இங்கும் என் தனிமையின் இடர்களை நினையாரோ ?

கன்னியரின் மயலால் தன்னினை விழந்தாரோ ?
மின்னிய வேல்விழியில் மன்னி மயங்கினாரோ ?
இன்னிசை கேட்டு மனம் உன்னி உவந்தனரோ ?
துன்னிய காதலினால் என்னினை விழந்தாரோ ?

# 40. வாழ வழி ?

ராகம் : ஹம்ஸாநந்தி
தாளம் : ஆதி

பல்லவி

**வாழவழி தந்தாள்** - என்னன்னை
வானோர் துதி**மயிலை** வாழும் **கற்பகவல்லி**

அனுபல்லவி

ஆழத்தமிழ் கடலுள் அமிழ்ந்து கவிதைமுத்து
நாளும் எடுத்தேயவள் நளினவடியில் சூட்டி

சரணம்

இன்பத்தமிழ்க் கடலுள் இறங்கிநயங்கள்நிறை
நன்பல பாமணிகள் நலமுடனே பொறுக்கி
என்பல பாடுபட்டும் எழிலுவருவாகக் கோர்த்தே
அன்புடன் பாமாலை அவள்பதம் சூட்டியிங்கு

# 41. காத்திடத்தருணமிதய்யா !

ராகம் : ஹம்ஸநாதம்
தாளம் : ஆதி

பல்லவி

காத்திடத் தருணமையா - **கபாலீச்வரா**
பார்த்திடர் போக்கி என்றன் பாபங்கள் நீக்கியென்னை

அனுபல்லவி

சாத்திரங்கள் புகழும் சமயநெறி தவழும்
க்ஷேத்திரமாம் **மயிலை** சேருமிறைவா என்னைக்

சரணம்

பஞ்சபுலன்களினால் பாரினில் உன்றன் திருக்
கஞ்சமலரடிகள் கணமும் நினைக்க வல்லேன் !
**தஞ்சமையா எனக்கு அஞ்சல் அருளுமையா !**
நஞ்சணி கண்டனே என் நலிவுகள் தீர்த்தருளிக்

# 42. சிங்காரவேலவா !

ராகம் : பந்துவராளி
தாளம் : ஆதி

### பல்லவி

உன்னடியார்க் கருள்வாய் - முருகா !
நன்னகர் **மயிலையில்** நண்ணும் **சிங்காரவேலா**

### அனுபல்லவி

கன்னல் தமிழில் கவி கானமும் பாடிடவே
இன்னல்கள் தீர்ந்திடவே இன்பம் பொழியவாழ்வில்

### சரணம்

**ஞானப்பழமே நீ** ஞாலமதில் போற்றும்
மோன வடிவே நீ முருகமால் மருகனே
கானமயில் தனிலே காதல் மங்கையருடன்
வானவர் துதிசெய்ய வரும் வடிவேலவனே

# 43. அன்னையும் நீ அல்லவோ ?

**ராகம் : சுத்ததன்யாஸி**
**தாளம் : ஆதி**

**பல்லவி**

**அன்னையும் நீயல்லவோ ?** - இந்த
அண்டசராசரம் அனைத்தையும் ஈன்ற நல்

**அநுபல்லவி**

புன்ன வன**மயிலை** பொலியும் **கபாலி**யண்ணல்
தன்னைமருவி மகிழ் தாயே **கற்பகமே** என்

**சரணம்**

நீயே கதியல்லாமல் நிலத்தினில் கதியுண்டோ ?
சேயே னெனைக் காத்தென்றும் தயைபுரிந்திடுவாயே !
மாயே பராசக்தி **மாமயிலை கற்பகத்**
தாயே தருணமிதே தாமதமேனோ என் ?

# 44. செய்தபிழை பொறுப்பாய் !

ராகம் : சாவேரி
தாளம் : ஆதி

பல்லவி

செய்தபிழை பொறுப்பாய் - உன்றன்
சேயேன் உன்சந்நிதியில் மாயங்களிலே சிக்கி

அனுபல்லவி

உய்யவழிகாண உன்னடி நாடிவந்தேன்
பொய்யுலகில் புகுந்து புனிதனுனை மறந்தேன் !

சரணம்

**சிங்காரவேலவா சேவற் கொடியோய் வா**
மங்காத வாழ்வுதா மகிழ்ந்தருள் செய்யவா !
கங்காதரன் மகிழும் கந்தா **மயிலைவாசா** !
உன்பாத மலரடி உறுதுணையெனும் சேயேன்.

# 45. மங்கள வாழ்வு

பதம்

ராகம் : நீலாம்பரி
தாளம் : ஆதி

பல்லவி

**திங்களணியும் என்றன் திருமயிலைக் கபாலி**
மங்கள வாழ்வு தந்தே மருவிடுவார் என்றும்

அனுபல்லவி

அங்கமதோடு என்னை அணைப்பார் அவரின் எழில்
பங்கயப் பாதமலர் பற்றி நான் வாழ்ந்திடுவேன்

சரணம்

கணமும் பிரியேன் என்றன் **கற்பகவல்லி** யென்பார்
மணமும் மலரும்போல **மயிலையில்** வாழ்வ மென்பார்
பணமும் வேண்டாமிரந்து பசிபோக்கினாலுமுன்றன்
குணமும் ஒன்றேபோதும் குவலயமீதில் என்பார்

# 46. உள்ளம் மலர்ந்ததடி !

பதம்

ராகம் : தேஷ்
தாளம் : ஆதி

பல்லவி

**உள்ளம் மலர்ந்ததடி** - ஸகியே
கள்ளத்தனமாய் மனம் கவர்ந்த **கபாலி**யினால்

அனுபல்லவி

மெள்ள வந்தென்னையவர் அள்ளியனைத்தேயின்பம்
கொள்ளை கொள்ளையாய்த் தந்தே கூடிக்கலந்தபோது

சரணம்

மாணிக்கமே கண்ணின் மணியே **கற்பக**மென்பார்
நாணிக்கவிழ்ந்தே நானும் நயமாய்த் தழுவிடவே
பாணிக்கிரணம் செய்தே பாங்குடன் வாழ்வமென்றார்
வாணியும் செந்திருவும் வாழ்த்தும் **மயிலை**வாழ

# 47. கொடிமாட மயிலை

ராகம் : வாசஸ்பதி
தாளம் : ஆதி

### பல்லவி

கண்டனரே உவகை கொண்டனரேயின்பம்
உண்டனரேயின் நில மண்டலமேல் - இங்கு

### அனுபல்லவி

கொண்டல் தவழும் மலர்
கொடிமாட **மயிலை**யில்
அண்டரும் தொண்டரும்
தண்டரும் **கபாலி**யை

### சரணம்

**கற்பகம்** அருளக்க **பாலி**யும் வீற்றிருக்க
நற்பதம் தூக்கி நல்விநாயகன் நடமாட
சிற்பரர் போற்றும் வேலன் சிங்காரமாய் இருக்க
தற்பரராம் **கபாலி** பொற்பதம் தரணியில்

# 48. ஆதாரமான தெய்வம்

ராகம் : சக்கரவாகம்
தாளம் : ஆதி

### பல்லவி

பாதாரவிந்தம் கண்டேன் - வாழ்வில்
**ஆதாரமான தெய்வமாதா,** உன் அருள்திருப்

### அனுபல்லவி

தேவாரம் பாடிப்புகழ்ந் தோங்கும் **மயிலைதன்னில்**
காதாரக் கேட்டறிந்து கண்ணாரக் கண்டு உன்றன்

### சரணம்

பொற்பதங்களேயிந்த புவியில் துணையாய் நம்பி
**கற்பகவல்லி**யுன்றன் கழலடிகள் பிடித்தேன் !
அற்பன் எனக்கருளி ஆதரித்தாளுமம்மா !
சிற்பரர் போற்றும் மாயே **கற்பகவல்லி**த்தாயே !

# 49. ஜகதீசா அருள்

ராகம் : பிலஹரி
தாளம் : ஆதி

**பல்லவி**

திருமாலும் பிரமாவும் உருமாறியறியாத
உருவான ஜெகதீசா பரமேஸ்வரா - அருள் !

**அனுபல்லவி**

பெருமானே புவிமீதில் சிறியேனின் துணை நீயே !
**பெருவாழ்வு தருவாயே** அடியேனுக் கருள்வாயே !

**சரணம்**

எல்லோரும் போற்றிட எழில் **மயிலா புரி**யில்
உல்லாசமாயிருந்து உன்னடியார்க்கு என்றும்
நல்லாசிகள் அனைத்தும் நல்கும் தக்ஷணாமூர்த்தி !
பொல்லாத சேயென்தன் பிழைகள் பொறுத்தருள்வாய் !

# 50. அல்லல் அறியாயோ ?

ராகம் : கானடா
தாளம் : ஆதி

### பல்லவி

சேயேன் படுமல்லல் அறியாயோ ? - அம்மா !
**தாயே நின் அருளின்றி உய்வேனோ ?** - உலகில் ?

### அநுபல்லவி

நாயேன் ஐம்புலன்களால் நானிலத்தில் வீணே
மாயங்களிலே சிக்கி மதிமயங்கி உழன்று

### சரணம்

முற்பவம் தனில் செய்த முழுவினை நீக்கியிந்த
அற்பன் எனக்கருளி ஆதரித்தாளுமம்மா !
பொற்பதியாம் **மயிலா புரியினில்** வாழந்திலங்கும்
**கற்பகாம்பிகே**யுன்றன் கழலடியில் கதறும்

# 51. பன்கை பூஷணி

ராகம் : பாகேஸ்ரீ
தாளம் : ஆதி

### பல்லவி

**மாமயிலாபுரி வாழ் கபாலீச்வரி**
மகிழ்ந்து குலாவிடும் **கபாலி** மனோகரியே !

### அநுபல்லவி

பூமகள் நாமகளும் போற்றிடும் உமையே !
தாமரை மலரடி தரணியில் துணையே !

### சரணம்

உன்னருளின்றி யிந்த உலகினில் உய்வேனோ ?
நின்னருள் தந்து இந்த சேயெனைப்பாராயோ ?
பன்னக பூஷணி பார்வதி ஈஸ்வரி !
இன்னமும் தாமதம் ஏனோ பராசக்தி ?

# 52. முத்துக்குமரைலளே !

ராகம் : ரஞ்ஜனி
தாளம் : ரூபகம்

### பல்லவி

**முத்துக் குமரையனே** அருள்
சித்தர்களும் பக்தர்களும் நித்தமுனை பக்திசெய்யும்

### அனுபல்லவி

கத்தும் திரைகடல் தத்தும் **மயிலையில்**
சித்தம் மகிழ்ந்தென்றும் சிங்காரமாய் வாழும்

### சரணம்

தந்தை **கபாலியும்** தாயும் களித்திட
விந்தை மயிலேறும் ***சிங்கார வேலையா***
எந்தையும் நீ என்றன் தாயும் நீதானையா !
முந்தை வினைபோக்கி முத்தி தந்தாளையா !

# 53. வரானோ ?

ராகம் : கரஹரப்ரியா
தாளம் : ஆதி

## பல்லவி

Y "W"&] " வளமைநிறை **மயிலை**
வளரும் **கபாலி** என்னைக்
கலவி குலவி மருவி யணைத்திட

## அநுபல்லவி

தீரானோ நொந்து நினைத்துருகி
வெந்து மனம்கருகும் எந்துயரந்தனை
வந்து போக்கியின்பம் தந்து கலந்தே யென்றும்
விந்தைபல புரிந்து சிந்தை மகிழச்செய்ய

## சரணம்

மாற்று மருந்து சொல்லித்தேற்று மெவருமின்றி
ஆற்றுப் பெருக்காய் கண்ணீர் ஊற்றுகிறேன் என்றன்
மாற்றுப் பொன்னிறமெனப் போற்றுமுடல் மெலிந்து
வேற்றுமையால் நலிந்து தோற்றுகிறேன் பிறைக்
கீற்றும் தென்றல் காற்றும் குயில்சாற்றும் கூற்றும்
கூற்றுவராய் ஏற்றுமிடர் ஆற்றுகிலேன்.

# 54. நல்லடிகள் பிடித்தேன்

ராகம் : பெஹாக்
தாளம் : ஆதி

### பல்லவி

உன்னை நம்பியிந்த உலகில் உயிர்வாழும்
என்னையம்புவியினில் காப்பாயே - இறைவா

### அனுபல்லவி

சென்னை நகாமதில் **சேர்மயிலாபுரி**யில்
புன்னை மர நிழலில் பொலிந்திருந்தேயருளும்

### சரணம்

அல்லும் பகலுமுன்றன் அடியேன் இவ்வவனியில்
அல்லல் களினால் மனம் ஆறுதலின்றிப்படும்
தொல்லைகள் அனைத்தையும் தொலைத்தே
யருளுமுன்றன்
**நல்லடிகள் பிடித்தேன்** நானில வாழ்வினிலே

# 55. நிலா நெருப்பு

ராகம் : கமாஸ்

தாளம் : ஆதி

## பல்லவி

வாரும் கபாலீச்வரா - வந்து
தாரும் எனக்கின்பமே

## அநுபல்லவி

நீரும் மௌனம் சாதிக்க
நிலாவும் நெருப்பாகுதே !
பாரும் இப்பாவை துன்பம்
பார்த்தேயாகிலுமுடன் !

## சரணம்

**பவனி வருகையிலே பார்த்தே மோகம் கொண்டேன்**
அவனியில் உன்மீதில் அழியாத காதல் கொண்டேன்
புவனியிலே **மயிலாபுரியில்** உறைபவனே
கவனிப்பாய் என்மீதருட் காதல் புரிந்திடவே

# 56. கற்பகமே அருள்வாய் !

ராகம் : கல்யாணி
தாளம் : ஆதி

### பல்லவி

**கபாலீச்சுவரன்** என்றும் குலாவி மகிழ்ந்திடும்
**கற்பகமே அருள்வாய் - திருமயிலைக்**

### அனுபல்லவி

சிவாய நமவென்று சிந்தை செய்பவர்க்கெல்லாம்
அபாயமில்லாமல் ஆண்டருளும் கருணை

### சரணம்

தேமதுரத் தமிழில் தேவிநின் அருள்திரு
நாம மகிமையை நான் நவின்றிட வேண்டுமம்மா !
**மாமயிலா புரி**யில் மகிழ்ந்திடும் **கற்பகமே**
தாமதமில்லாமல் தனையனுக் கருள்வாய்.

# 57. பாதங்கள் பற்றினேன்

ராகம் : சாருகேசி
தாளம் : ஆதி

பல்லவி

**தாயே நான் உன்றன் சேயல்லாவோ** அம்மா !
தண்ணருள் தந்திடுவாய் - **கற்பகத்**

அனுபல்லவி

மாய உலகினில் மனித ஜன்மமெடுத்தேன்
தூய நல்வாழ்வளிப்பாய் துணையுணை நம்பினேன்

சரணம்

சங்கரி சாம்ப சதாசிவ நாயகி
மங்கள தாயகி மாயனின் சோதரி
எங்கணும் சக்தியாய் இயங்கிடும் சோதிநின்
பங்கஜ பாதங்கள் பற்றினேன் பார்வதி.

# 58. ராகமாலிகை

ராகம் : ஆனந்த பைரவி
தாளம் : ஆதி

### பல்லவி

**கற்பகவல்லிநின் பொற்பதங்கள் பிடித்தேன்**
நற்கதி யருள்வாயம்மா தேவி

### அனுபல்லவி

பற்பலரும் போற்றும் பதி**மயிலாபுரியில்**
சிற்பம் நிறைந்த உயர் சிங்காரக்கோயில் கொண்ட

### சரணம்

நீயிந்த வேளைதனில் சேயன்னெனை மறந்தால்
நானிந்த நானிலத்தில் நாடுதல் யாரிடமோ ?
ஏனிந்த மௌனமம்மா ஏழையெனக் கருள ?
**ஆனந்த பைரவியே** ஆதரித்தாளுமம்மா !

**ராகம் : கல்யாணி**

எல்லோர்க்கும் இன்பங்கள் எழிலாய் இறைஞ்சி என்றும்
நல்லாசி வைத்திடும் நாயகியே நித்திய
**கல்யாணியே கபாலி** காதல் புரியுமந்த
உல்லாசியே உமாஉனை நம்பினேனம்மா !

**ராகம் : பாகே ஸ்ரீ**

நாகேஸ்வரி நீயே நம்பிடும் எனைக்காப்பாய் !
வகீஸ்வரி மாயே வாராய் இதுதருணம் !
பாகேஸ்ரீ தாயே பார்வதியே இந்த
லோகேஸ்வரி நீயே உலகில் நீ துணையம்மா !

**ராகம் : ரஞ்ஜனி**

அஞ்சன மையிடும் அம்பிகே எம்பிரான்
கொஞ்சிக் குலாவிடும் வஞ்சியே நின்னிடம்
தஞ்சமென அடைந்தேன் தாயே உன்சேய்நான்
ரஞ்ஜனியே ரக்ஷிப்பாய் கெஞ்சுகிறேன் அம்மா !

# 59. அஞ்சாதே !

ராகம் : பேகட
தாளம் : ஆதி

### பல்லவி

அஞ்சாதே நீயிந்த அவனியிலே என
அபயம் கொடுத்தெனை ஆண்டாள் என்னன்னை

### அனுபல்லவி

நஞ்சாடும் மார்பன் இந்த நன்**மயிலை**யின் நாதன்
கொஞ்சிக் குலாவி மகிழ் கோதை **கற்பகவல்லி**

### சரணம்

உண்மை நெறிதவறா உத்தமனாய் மனத்தில்
திண்மை நிறைந்த ஒரு தீரனாய் வாழ்வதில்
கண்மை யிட்டே மயக்கு கணிகையால் கலங்காமல்
வண்மை நிறைந்த பெரும் வள்ளலாய் வாழ்ந்திடவே

# 60. ஒரு நொடி ஒரு யுகம்

பதம்

ராகம் : தோடி
தாளம் : ஆதி

பல்லவி

ஒரு நொடி ஒருயுகமெனக் கழியுதேயடி !
கருகுதே மேனியுள்ளம் உருகுதே என் செய்குவேன் ?

அனுபல்லவி

**திருமயிலையில்** வாழும் பெருமைக் **கபாலீச்வரன்**
வருவார் தானோடி என்னை மருவார் தானோடி தோழி ?

சரணம்

கையினில் வளைகள் சோரக்
காலிற் சிலம்பும் கழர
மெய்யும் மெலிய மன்மதன்
மேலும் கணைகள் சொரிய
மையலும் மீறிடத் தென்றல்
மதியும் அனலைக் கொட்ட
தையலே சகியேன் அவர்
தன்னையிங்கழைத்து வாடி !

# 61. முத்தமிழின் சுவை !

ராகம் : மணிரங்கு
தாளம் : ஆதி

### பல்லவி

**வல்லி**யருள் தந்தாள் - என்றும்
நல்லியல் இசையோடு நாடகத் தமிழ்பாட

### அனுபல்லவி

அல்லியும் ஆம்மலும் அலரும் தண்தாமரையும்
மல்லிகை முல்லை மலி **மாமயிலைக் கற்பக**

### சரணம்

முத்தமிழின் சுவைக்கு முக்கனியிணையாமோ ?
அத்தனை பெருமைக்கும் அமிழ்தமும் நிகராமோ ?
சித்தம் மகிழ்ந்து தெய்வச் செந்தமிழில் சிவனாம்
பித்தனை சித்தனை நித்தமும் வாழ்த்திட

# 62. இச்சைப்படுவதுனக்கு ஏற்குமோடி?

பதம்

ராகம் : கல்யாணி

தாளம் : ஆதி

பல்லவி

**பிச்சையெடுத்தலையும் பித்தனைக்** கண்டவன் மேல்
இச்சைப் படுவதுனக்கேற்குமோடி ? - பெண்ணே !

அனுபல்லவி

பச்சைப் பசுங்கிளியே பாவையே **கற்பகமே**
இச்செயலைப் புரிய வெட்கமில்லையோ கண்ணே !

சரணம்

கந்தைத் துணியுமின்றிக் கரிப்புலித் தோலுடுப்பான்
விந்தையாய்ச் சாம்பல் பூசி விடப்பாம்பையும் சுமப்பான்
தந்தையாய் யாருமிலான் தன் பிறப்பையும் அறியான்
சிந்தை செய்தால் உன்செயல் சிரிக்கத் தகுவதன்றோ !

உற்றவர் யாருமிலான் ஊரும் விடையிலேறிச்
சுற்றப் புறப்படுவான் சுடலைகாப்பான் விறகும்
விற்றவனே பிழைப்பான் விஷத்தையும்தான் குடிப்பான்
நற்றமிழ் **மயிலையில்** நாளும் கபாலமேந்தி.

# 63. மௌனம் தகுமோ ?

ராகம் : மோகனம்
தாளம் : ஆதி

### பல்லவி

**மௌனம் தகுமோ தாயே** ? - தேவி !
கௌரீ **மயிலைவாழும் கற்பகவல்லி**யிந்த

### அநுபல்லவி

யௌவனசுந்தரி யாவரும் போற்று முந்தன்
கௌரவம் குறையுமோ கருணைக் கடலுனக்கு ?

### சரணம்

சேயழுதாலிந்த செகத்தினில் துடிதுடித்து
தாயவள் வந்தாறுதல் தந்திடும் இயல்பதை
நீயறியாயோ? சேயேன் நீசனென்றெண்ணினாயோ?
தாயல்லவோ அம்மா தருணமீ தென்னைக்காக்க

# 64. காதல் நெஞ்சம்

ராகம் : பாகேஸ்ரீ
தாளம் : ஆதி

### பல்லவி

காதல் நெஞ்சம் அவரைக் காணத் துடிக்குமந்த
**வேதனையை அவர்க்கு விளம்பாயோ ?** - ஸகியே

### அனுபல்லவி

மாதவன் போற்றுமிந்த **மாமயிலைக்கபாலி**
ஆதரவு தந்தென்னை ஆளுவாரென நம்பும்

### சரணம்

ஒன்றாயிருந்திடுவோம் ஒருகணமும் பிரியோம் !
நன்றாக நாமுமிங்கு நல்வாழ்வு வாழ்ந்திடுவோம் !
என்றாரவரென்உள்ளம் வென்றார் **கபாலீச்சுவரன் !**
இன்றாகிலும் வாராரோ என்றேங்கிக் கலங்கிடும் !

# 65. அம்மா ! ...

ராகம் : சுபபந்துவாரளி
தாளம் : ஆதி

### பல்லவி

அம்மா.... அனவரதமுனது
அடியவன் படுமிடர் தனையறியாயோ என்றன் !

### அனுபல்லவி

இம்மா... நிலமீதில் உன்திரு
இணையடி துணையெனக் கதறுமெனக் கருள்வாய் !

### சரணம்

தேமலர்ப் பொழில்கள் சூழும் வளமை நிறை
மாம யிலையில் உறைமயிலே கற்பகமுனைப்
பாமலர் நிதம்தூவிப் பாடிப் புகழவருள்
நாமகள் பூமகளும் நானும் புகழுமென்றன்

# 66. காணத்துடித்தாலடி !

பதம்

ராகம் : ஸிந்துபைரவி

தாளம் : ஆதி

பல்லவி

காணத்துடித்தாயடி மானே - கண்டால்
நாணமுனக்காகுமோ தேனே கண்குளிரக்

அனுபல்லவி

**பாணர்பாடிப் புகழும் பதிமயிலா புரியில்**
காண மனம் கவரும் காதலன் **கபாலி**யைக்

சரணம்

கட்டழகிலே மயங்கிக் கருத்தைப் பறிகொடுத்தாய் !
நட்டமரம்போல் நின்றாய் நன்றோ நவின்றிடுவாய் ?
விட்டவனைப் பிரிந்த வேதனையை நினைத்தே
சொட்ட நனையக் கண்ணீர்விட்ட **கற்பக**மே நீ !

# 67. புண்ணியம் செய்ததையா !

ராகம் : பைரவி
தாளம் : ஆதி

பல்லவி

**புண்ணியம் செய்ததையா !** - இந்த
புவிதனிலே புகழும் புனித **மயிலாபுரி**

அனுபல்லவி

நண்ணிக் கபாலமேந்து நாதன் **கபாலீச்சுவரன்**
பெண்ணி நல்லாள் **கற்பகப்** பெருமாட்டியுடன் வாழப்

சரணம்

வானவரும் மகிழ்ந்து வந்து புகழ்ந்து வேதம்
தானவர் ஓதிடுவார் தாமரையும் மலரும்
கானமயில்களாடும் கடலும் முழங்கும் குயில்
கானமிசைக்கும் தெய்வக் கருணை ததும்ப நல்ல

# 68. சிங்காரவேலவா !

ராகம் : வராளி
தாளம் : ஆதி

### பல்லவி

**சிங்கார வேலவா** வா வா வா முருகா
மங்காப் புகழ் **மயிலை** மன்னும் குகா ஷண்முகா

### அனுபல்லவி

கங்கா நதியணியும் **கபாலி**மைந்தனே
இங்காகிலும் கருணை இரங்கிடுவாய் கந்தனே !

### சரணம்

வேலதுவும் பொன்மயில் வாகனமும் சேவலின்
கோலக் கொடியும் அருள் கொண்டு விளங்கக்குண
சீலக்குமரி வள்ளி வேதக் குஞ்சரியோடு
சாலக்குலவி என்றும் சந்ததமும் மகிழும்

# 69. அற்புதக்காட்சி

ராகம் : பூபாளம்
தாளம் : ஆதி

பல்லவி

**அற்புதக் காட்சியடி** - தோழி
**கற்பகவல்லி**யுடன் **கபாலி**வரும் பவனி

அனுபல்லவி

நற்புகழ் **மயிலை**யின் நகர்வீதிதனிலே
பொற்புறு விடையின்மேல் பொலிந்தருளும் பவனி

சரணம்

வேதங்கள் ஓதிடும் வேதியர் ஒருபால்
கீதங்கள் பாடிடும் கின்னரர் ஒருபால்
பாதங்கள் போற்றிடும் பக்தர்கள் ஒருபால்
நாதங்கள் முழங்கிடும் நாயகனின் பவனி

# 70. இன்பக்கனவு

பதம்

ராகம் : சாரங்கா

தாளம் : ஆதி

### பல்லவி

இன்பக் கனாவிலென்னை இருகத்தழுவியென்தன்
அன்பர் **கபாலீ**ச்வரன் அணைத்தாரடி - ஸகியே

### அனுபல்லவி

துன்பமெல்லாம் மறந்தேன் !
துயர்களையும் துறந்தேன் !
அன்பர் முத்தமாயிரம் அதரம் கனியத் தந்தார்

### சரணம்

மயிலே மயிலே என்றார் !
மயிலும் மீறுதே என்றார் !
குயிலே உனது குரல்
கோதை **கற்பக**மென்றார் !
அயிலே விழிகளென்றார்
அவைதன் மேற் பாயுதென்றார் !
**மயிலை** நகரில் வாழும்
மானே தேனே என்றார் !

# 71. தவிப்பதை அறியாரோ ?

**பதம்**

**ராகம் : மாயாமாளவகௌள**
**தாளம் : ஆதி**

**பல்லவி**

**தவிப்பதை அறியாரோ?** - ஸகியே
புவியதில் **கபாலி**மேல் புனிதக்காதலால் மனம்

**அநுபல்லவி**

அவிழ்இதழ் மலர்புனை அன்பனை யெண்ணிநிதம்
நவிலுவதற்குரிய நாண மிகுமையலால்

**சரணம்**

மாலை மயங்கும் நேரம் மாய்த்திடுதே குயிலும்
சோலைக்குயில் கூவமனம் சோருதே வெண்ணிலவும்
பாலைப்போலப் பொழிந்து பதைத்திடச் செய்திடுதே !
வேலைப்போலத் தென்றல் என்மேல் வீசுதே காமத்தீயால் !

# 72. திருநாமம்

ராகம் : ஷண்முகப்ரியா
தாளம் : ஆதி

**பல்லவி**

**முருகா** உன்றன் திருநாமம் கேட்டால்
உருகாதவர் உண்டோ **திருமயிலை** மருவிவளர் !

**அனுபல்லவி**

தருவாயுன் தண்ணருள் தந்தே தரணியதில்
பெருவாழ்வு வாழ்ந்திடப் பேரருள் புரிந்திடும்

**சரணம்**

**ஷண்முகனே குமர சக்தியவள் புதல்வா !**
பண்முறைப் பதம்பாடிப் பாதம் புகழ்ந்திடவா !
தண்முகில் கண்டாடும் தனிமயில் ஏறி நீவா !
விண்முதல் யாவர்க்கும் விரைந்தருள் செய்யவா !

# 73. க்ஷேத்திர மயிலை

ராகம் : நாட்டைக்குறிஞ்சி
தாளம் : ஆதி

### பல்லவி

**காத்திடத்தருணமையா - கபாலீச்வரா**
பார்த்திடர் போக்கி யென்றன்
பாபங்கள் தீர்த்தருளிக்

### அனுபல்லவி

சாத்திரங்கள் புகழும் சமயநெறி தவழும்
க்ஷேத்திரமாம் **மயிலை** சேரும் இறைவா என்னைக்

### சரணம்

பஞ்சபுலன்களினால் பாரினில் உன்றன்திருக் !
கஞ்சமலரடிகள் கணமும் நினைக்கவல்லேன் !
தஞ்சமையா எனக்கு அஞ்சல் அருளுமையா !
நஞ்சணிகண்டனே என் நலிவுகள் தீர்த்தருளிக் !

# 74. சிவரஞ்ஜனி

ராகம் : சிவரஞ்ஜனி
தாளம் : ரூபகம்

### பல்லவி

கற்பகமே இப்புவியில்
அற்ப னெனக் கருள்வாய்

### அனுபல்லவி

சிற்பரர் போற் றும்**மயிலைத்**
தற்பரா**க பாலி** மருவும்

### சரணம்

அபயவரத கரமெனை நிதம்
ஆண்டருளும் என நம்பினேன் !
உபயபாதம் மலரனுதினம்
உளமதில் வைத்தே பூஜித்தேன் !
பவவினைகளை அறுத்தெனை நல்ல
பணிபுரிந் தருள்வாயே !
சிவ னவன்தன திடமருங்கினில்
சேர்ந்தருளும் நற்சுந்தரியே !

# 75. மயக்கிவிட்டாரடி !

பதம்

ராகம் : ஸிந்துபைரவி
தாளம் : ஆதி

## பல்லவி

**மயக்கி விட்டாரடி மாதே** - என்னைத்
தயக்கமின்றியே என்தன் தளிர்க்காம் பற்றி ஈர்த்து

## அனுபல்லவி

நயக்கு மெழில் மலியும் நகர்**மயிலை**யின் இன்பம்
பயக்கும்படி அருளிப் பாலித்திடும் **கபாலி**

## சரணம்

இன்ப மொழிகள் பேசி இதயத்தையே கவர்ந்தார் !
இந்த நல்வாழ்விலென்றும் இணைபிரிந்திடோமென்றார் !
என் பருவமவர்மவர்க்கு ஏற்றதோர் போதை என்றார் !
எடுத்துத் திருமேனியோடு ஒன்றிடவே அணைத்தார் !
பொன்பல பூட்டியென்னைப் பொலிய வைத்தே
மகிழ்ந்தார் !
பொற்கொடியே **கற்பகப்** பூங்கொடி நீயேயென்றார் !
அன்பர் **கபாலி** முத்தம் ஆயிரம் தந்து நின்றார் !
அகமும் குளிர வைத்தார் அதிகமேனடி சொன்னால் !

# 76. சகியேனடி ஸகியே !

**பதம்**

**ராகம் : கர்நாடக தேவகாந்தாரி**
**தாளம் : ஆதி**

**பல்லவி**

**சகியேனடி ஸகியே** இந்த
மகிதலந்தனிலென்றன் **மயிலை**நாதன் பிரிவைச்

**அநுபல்லவி**

அகில உலகம்போற்றும் அழகன் **கபாலீச்வரன்**
சுகித்தணைத்தார் அந்தச் சுந்தானின் பிரிவை

**சரணம்**

வண்ணப் பசங்கிளிக்கே வார்த்தைகள் சொல்லிப்பாலும்
சின்னப் பழமுமூட்டித் **திருமயிலை** ஈசர்க் கென்
எண்ணமும் எந்நிலையும் எடுத்தோதித்தூது சொல்லி
அன்னவரை இக்கணம் அழைத்தோடிவாடி என்றேன் !
பண்ணமுதமும் பாலும் பயிலும் குழலிசையும்
பன்னகமுமிழ் நஞ்சைப் பரவிடும் இன்னிலேயில்
கண்ணரும் நீர் சொரியக் காத்துக் காத்திருந்தேன்
மன்னன் வாவு காணேன் மாதே என் செய்வேனடி !

# 77. கபாலி மகிழ் மைந்தா !

ராகம் : கல்யாணி
தாளம் : ஆதி

### பல்லவி

கந்தா **கபாலி** மகிழ் மைந்தா அனுதினமும்
செந்தாமரையடிகள் சேவித்திடும் அருள்தா

### அனுபல்லவி

வந்தாள் கருணைவெள்ளம் தந்தாள் தருணமீதே
நிந்தாள் துணையின்றி யின் நிலத்தினில்
துணையுண்டோ?

### சரணம்

**சிங்காரவேல்வா** சேவற்கொடியோய் வா
மங்காதவாழ்வுதா மகிழ்ந்தருள் செய்யவா
கங்காதான் மகிழும் கார்த்திகேயா கடம்பா
வங்கார **மயிலை**யில் வாழும் மயில் வாகனா

# 78. பதமே துணை

ராகம் : பிருந்தாவன சாரங்கா

தாளம் : ஆதி

பல்லவி

**உன்னிரு மலர்ப்பாதம் உறுதுணை** யென நம்பி
சென்னியில் வைத்தென்றும் சேவித்திடு வேனம்மா

அனுபல்லவி

கன்னித்தமிழ் மலரும் கவின் நிறை **மயிலை**யில்
நன்னிறைவாய் அமரும் மாயே **கற்பகத்** தாயே !

சரணம்

சரணம் சரணம் என்றும் சந்ததமும் துதித்தேன் !
வரமருளும் அம்பிகே வாழ வழியருளத்
தருணம் இதுதானம்மா தண்ணருள் தந்திடுவாய் !
மரகதமே **மயிலை** மன்னும் **கற்பகவல்லி.**

## 79. இரக்கம் இல்லையோ?

ராகம் : ஹம்ஸாநந்தி
தாளம் : ஆதி

பல்லவி

**இன்னும் இரக்கம் இல்லையோ அம்மா** தாயே !
மன்னு**மயிலை** தன்னில் வாழ்ந்து
மின்னும் **கற்பகவல்லி** என்மீதில்

அநுபல்லவி

உன்னுடைய நற்பொன்னின் பாதம்
சென்னியிலே வைத்தே நண்ணி நாடினேன்

சரணம்

உன்திருவடி உறுதுணையென
உலகினில் தினமும் உனைநாடி !
வந்திருந்துன்றன் வாசலில் நின்று
வணங்கும் எனை நீ மறந்தாயோ?
செந்தமிழே நீ ஜெயமருளிநற்
செயல் புரிந்திட அருளாயோ !
நிந்திருவடி தணையன்ற யிந்த
நிலத்தினில் வேறு கதியுண்டோ ?

# 80. வித்தகர் யாரோடி ?

ராகம் : வசந்த
தாளம் : ஆதி

### பல்லவி

விடையிலேறியிந்த வீதிவலம் வந்த
வித்தகர் யாரோடி? - தோழி

### அனுபல்லவி

சடையில் கங்கையும் பிறை ச்சந்திரன் ஏந்திப்பலர்
புடைசூழப் புவிமீதில் புலியாடையுடையாக

### சரணம்

தெருவி வருகையிலே தேவாதி தேவரர்
பருவம் நிறைந்த இளம் பாவை எனையே பார்த்து
கருவிழிகளில் இன்பக் காந்த சக்தியாயென்றன் !
கருத்தைக் கணப் பொழுதில் களவு செய்தாரடி !
நெற்றியில் நீரணிவார் நெடுங்கரித்தோலுரியைச்
சுற்றியுடுத்திருப்பார் சூலமும் ஏந்திடுவார் !
பற்றி மழுவும் மானும் பாம்பையும் தான்புனைவார்
நற்றிரு **மயிலை**யின் நாதன் இவர்தானோடி ?

# 81. கபாலியின் பவனி

ராகம் : ஹம்ஸத்வனி
தாளம் : ஆதி

## பல்லவி

**வீதி வலம் வந்தார்** - பெரும்
வீறுகொள் ஏறின்மேல் ஏறிக்**கபாலீச்வரன்**

## அனுபல்லவி

மேதினிதன்னில் திகழ்
ஜோதியெனவே யொரு
பாதிமதியணிந்து
பவனிவர அவனிதனில் **திருமயிலை** நகரதனில்
(கண்ட நடை)

## சரணம்

மானும் மழுவும் இளம் மதியும் டமருகமும்
வானும் நடுங்கும் பாம்பும் வளரும் அனலுமேந்தி
தானும் கங்கையைத் தூக்கி தஞ்சமென்றவர்க்கருள்
ஈனும் கரங்கள் பற்றி
இருடிகளும் மறையவரும் இருமருங்கில் புடைசூழ
(கண்ட நடை)

# 82. ஏனோடி இச்சை கொண்டாய் ?

**பதம்**

**ராகம் : ஸிம்மேந்திரமத்யமம்**
**தாளம் : ஆதி**

**பல்லவி**

**இவர்மீதில் ஏனோடி இச்சை கொண்டாய்?** - உன்றன்
தவமாக மனம்கோரும் யுவராஜன் இவர்தானோ ?

**அனுபல்லவி**

அவர்மீதில் அரவங்கள் ஆடுவதைக் கண்டும்
அச்சமில்லாமல் நீயும் இச்சகம் பேசிப்பேசி

**சரணம்**

பித்தனெனப் பேரெடுத்தார் பிரம்பாலடியும் பட்டார் !
பிச்சையெடுத்தாரிவர் பிறப்பினையாரறிவார் ?
மத்தகஜத்தோலுடுத்தார் மயானப் பொடியணிந்தார் !
மன்மதனை எரித்தார் மறவியையும் உதைத்தார் !
வித்தகராய் கபாலி விடையின் மேலேறி வந்தார் !
வில்லாலடியும் பட்டார் விடத்தைக் குடித்துக் கொண்டார் !
அத்தனையும் செய்தார் அணங்கா மொருத்தியையும்
நித்தம் தலையில் வைத்தே நின்றாடு வாரடி?

# 83. கண்டதுண்டோ சொல்லடி?

ராகம் : மாண்டு

தாளம் : ஆதி

### பல்லவி

**கண்டதுண்டோ சொல்லடி? - இந்த**
மண்டலந்தனிலிந்த **மயிலைக் கபாலி**யைப்போல்

### அனுபல்லவி

அண்டர்க்கும் தொண்டர்க்கும்
அபயம் தந்தே நஞ்சை
உண்டவன் உயர்நீல
கண்டவனைப்போல்

### சரணம்

பக்தருக் கிரங்குபவன் பாடும் அடியவர்க்கு
நித்தம் அருள்தருவான் நிமலன் அவன் அமலன்
வித்தகன் சித்தனவன் வேதமுதல்வன் ஜீவ
முக்தியருள இன்ப மூர்த்தியவனைப்போல

# 84. பன்கை பூஷணன்

பதம்

ராகம் : காபி
தாளம் : ஆதி

## பல்லவி

**என்னதான் சொன்னாரடி?** - அவர்
சொன்னதெல்லாம் சொல்லடி தோழி ?

## அனுபல்லவி

பங்கை பூஷணன் பாதிமதியணியன்
நன்னகர் **மயிலை**யில் நாதன் **கபாலீச்வரன்**

## சரணம்

கணத்திலிங்கு வந்தெனைக்
கலந்திடுவேன் என்றாரோ?
மணத்திரு நாளி தென்று
மங்களமாய்ச் சொன்னாரோ ?
குணத்திலென்னைப் பெரும்
குன்றென மொழிந்தாரோ ?
சுணக்கமில்லாமல் நீயும்
சுருக்கென வந்ததேனோ?

# 85. போடி போடி !

பதம்

ராகம் : தோடி
தாளம் : ஆதி

பல்லவி

**போடி போடியென்று பொறுமையிழந்தேன்**
என்மேல்
மோடி செய்யலாகுமோ தோழி?

அனுபல்லவி

கூடிக்குலாவிடக்க **பாலீச்வரனை** இப்போ
ஓடி மயிலைசென்று தேடி அழைத்து வாடி

சரணம்

திங்கள் அனல்பொழியத் தென்றல் கணைசொரிய
மங்களப் புதுமலர் மஞ்சம் எனைவருத்த
அங்கமெலாம் மெலிய அல்லல் படுவதெல்லாம்
மங்கை நீ சொல்ல வேகமாக விரைந்தோடி

சரணம்

பாலும் கசந்தேனடி பழமும் வெறுத்தேனடி
நாலுபேர் சொல்லக்கேட்க நாணமுமாகுதடி
மேலும் பசந்தேனடி மேதினியில் உன்னையொருக்
காலும் மறவேன் எனக்காகப் பரிந்தோடி

# 86. வந்தனைச் செய்திடுவாய்

ராகம் : சாமா
தாளம் : ஆதி

### பல்லவி

**வந்தனை செய்திடுவாய்** - மனமே
உந்தனை உய்விக்கும் செந்தமிழ்க்கந்தனை

### அனுபல்லவி

முந்தைவினையை நீக்கும் மூவிருமுகப் பொலிவும்
விந்தை மயிலழகும் வேலழகும் நினைந்து

### சரணம்

கருணைததும்பும் அவன் கண்ணழகும் எழில்
அருள் நிறைந்து பொலியும் திருவுருவமும் மலர்
திருவடிகளின் புண்ய பெருமையையும் மகிமையும்
ஒருபொழுதும் மறவா திருந்திடாமலே சதா.

# 87. ஆடிடுவேன்

ராகம் : பாகேஸ்ரீ
தாளம் : ஆதி

## பல்லவி

ஆடிடுவேன் உன்புகழ் பாடிடுவேன் உன்னை
நாடிடுவேன் அருள் நாயகன் நீயன்றோ ?

## அனுபல்லவி

தேடிடுவேன் உன்னை தேன் துளிர் மயிலையில்
கூடிடுவேன் இந்தக் குவலய மீதிலே

## சரணம்

செழித்தோங்கு வளரும்
செண்பகத் தோட்டத்தில்
பழித்தெனைப் பரிகாசம்
பண்ணி உன் காதலை
விழித்தின் புறத்தந்தார்
விடையேறும் கபாலியே
வழித்துணை நீயன்றோ !
வாழ்த்தி வணங்கியுன்னுடன்

***சிங்காரவேலவ***னென்றே செல்லமாகப் பேரும் வைத்தீர்
மங்காத பருவம் நிறை மாதரிருவருடனே
சிங்கார லீலைகள் பல செய்வான் மயில் தனிலேறி
வங்காரம் பவனிகளும்
வருவான் குருவாய் அருளே தருவான்

மங்கையாம் ***கற்பகவல்லி*** மகிழ்ந்தே குலவிடதன்
அங்கைகளால் அணைத்திட மணுகி உன்பாரமானாள்
கங்கையோமதித்திடாதுன் கனத்த சடையில் பெரும்
பங்கைப் பிடித்தாள் வாழ்வை
வெறுத்தோ - ஒறுத்தோ - கறுத்தோ - பொறுத்தோ ?

# 90. உன்னை நான் காண்பதெங்கே?

ராகம் : பரசு
தாளம் : ஆதி

**பல்லவி**

**உன்னை நான் காண்பதெங்கே ?** - முருகா
என்னைநீ ஆண்டருள் அந்நாளும் என்னாளோ?

**அனுபல்லவி**

அன்னை தந்தைகுருவும் அருட்தெய்வமும்நீயே !
வன்ன மயில் மீதினில் வள்ளி குஞ்சரியோடு

**சரணம்**

**திருப்பரங்கிரி**தனில் இருப்பாயோ, குமரா?
**திருச்செந்தூர்** பதியில் அமர்வாயோ முருகா !
விருப்புடன் உறைவது **திருவாவி நன்குடியோ?**
திருவேரகம் எனவே திகழும் **ஸ்வாமி மலையோ?**

**குன்று தோறாடல்** நின்று அருளுவையோ ?
சென்று **பழமுதிர் நற்சோலை**யில் ஆள்வையோ !
அன்று அரக்கர்களை வென்று அமரர்களை
நன்று காத்த வடிவேலவனே !
என்றும் எனக்கருளும் உன்றன் திருப்பதத்தை
எங்கு மனங்குளிரக் கண்டிடுவேன் ?
அன்பரகக் கோவிலிலோ ஆறுபடை வீட்டிலிலோ ?
ஆறுமுக வேலவனே ?

# 88. சரவணபவன்

ராகம் : பந்துவராளி
தாளம் : ரூபகம்

## பல்லவி

**முருக**னைப் பணிதினமே - மனம்
உருகத் தமிழில் பாடிப்பாடி

## அனுபல்லவி

திருவருள் என்றும் தருபவனவன்
வருமிடர் தீர்த்து வரமருள் பவன்

## சரணம்

சரணம் சரணம் சந்ததமுமென
சரவணபவன் சற்குருவானவன்
வரமருள் செய்வான்வள்ளிக் குஞ்சரியை
அரவணைத் தென்றும் ஆளும் **மயிலை.**

# 89. கபாலமேன் ஏந்துகிறீர் !

ராகம் : கல்யாணி
தாளம் : ஆதி

### பல்லவி

தெய்வத் தமிழ்**மயிலை**யின் தெருவிலலைந்தே யுன்றன்
**மெய்வளர்க்கவோ கபால மேந்துகின்றீர்** - ஐயா ?

### அநுபல்லவி

செய்வதெதுவு மறியாச் சேய்களை ஈன்றெடுத்தீர்
உய்வதெப்படியோ உன்றன்
விதியோ - மதியோ - சதியோ - கதியோ ?

### சரணம்

தந்திமுகன் என்னுமுன்றன் தனையன் எதற்கும்தானே
முந்திடுவேன் எனநிதம் முரண்பல செய்தானோ ?
வந்திடுவார் மோதகங்கள் தந்தால் அகங்களித்தே தன்
தொந்தி குலுங்கிடக் கூத்து
தோம் தக - ததிங்கின - தோமென்ப தாலோ?

# 91. உள்ளம் உருகாதா?

ராகம் : மாயமாளவகௌள
தாளம் : ஆதி

**பல்லவி**

**சரவணபவகுக ஷண்முகனே** - குரு
பரவெனத் திகழ் வடிவேலவனே அருள்

**அனுபல்லவி**

அரவணை துயிலுமால் அரிமருகா முருகா !
வரமருளி அன்பர்க்கு வாழ்வு தர வருக !

**சரணம்**

உள்ளம் உருகாதா உன்னை அடியார்க்கருளை
அள்ளி முருகாதா அணங்கு தெய்வானை நாதா
வள்ளி மணவாளா வந்தாள் சிங்கார வேலா
புள்ளி மயில் நேசா புனித **மயிலை** வாசா

## 92. உறுதுணை

ராகம் : கல்யாணவஸந்தம்
தாளம் : ஆதி

### பல்லவி

**உன்னிரு மலர்ப்பாதம் உறுதுணை** யென நம்பி
சென்னியில் வைத்தென்றும் சேவித்திடு வேனம்மா

### அனுபல்லவி

கன்னித்தமிழ் மலரும் கவின் நிறை **மயிலை**யில்
நன்னிறைவாய் அமரும் மாயே **கற்பகத்** தாயே !

### சரணம்

சரணம் சரணம் என்றும் சந்ததமும் துதித்தேன்
வரமருளும் அம்பிகே வாழ வழியருள்வாய் !
தருணம் இதுதானம்மா தண்ணருள் தந்திடுவாய் ?
மரகதமே **மயிலை** மன்னும் **கற்பகவல்லி**

# 93. கல்யாணியே கண்பாராய் !

ராகம் : கல்யாணி

தாளம் : ஆதி

### பல்லவி

**கல்யாணியே** கண்பாராய் - என்றும்
நல்லாசிகள் தந்து ஆளாய் அம்மா !

### அனுபல்லவி

எல்லாரும் போற்றிட
எழில் **மயிலாபுரி**யில்
உல்லாசமாயிருந்து
உன்னடியார்க்கருளும்

### சரணம்

கருணாகரி கௌரீ
கஞ்சதளாய தாக்ஷி
**திருமாமயிலை** வாழும்
திரிபுரசுந்தரி
அருள்வாய் அனுதினமுன்
இருதாளினை நம்பினேன்
வருவாய் **கற்பகவல்லி**
வரமருளி வாழ்வுதா

# 94. ராகமாலிகா

**ராகம் : மோஹனம்**
**தாளம் : ஆதி**

**பல்லவி**

**என்மன மோகனன் வந்தாரடி** - மயில்
வாகனன் ***சிங்காரவேலவன்*** (என்மன)

**அனுபல்லவி**

மோகமான விரக தாபமதாய் மயங்கும்
போதினிலே என்னைத் தாவியணைத்திடவே

***சரணம்***

**ராகம் : தோடி**

மாமரச் சோலையிலே மாங்குயில்கள் முருகன்
நாமமதைக் கூவிட நானும் உருகி நின்றேன்
***மாமயிலைக்*** கதிபன் மகிபன் குக ஷண்முகன்
தாமரைப் பதம் நோக தரணியில் விரைந்தோடி

# 96. நித்திரையில் வந்தானடி !

ராகம் : ஆபேரி
தாளம் : ஆதி

### பல்லவி

**நித்திரையில் வந்தானடி** - என்றன்
நெற்றியிலே முத்தம் பலதந்தானடி கந்தன்

### அநுபல்லவி

சத்தியம் செய்தே **முருகன்** பத்தினியே ரத்தினமே
இத்திளமே மஞ்சமதில் இன்புறுவோமென்றே என்றன்

### சரணம்

வெட்டிப்பேச்சு வேண்டாமடி கட்டிக்கரும்பே நீயன்றோ !
கட்டித் தழுவுவாய் என்றான் ஒட்டியே ஒளிந்து கொண்டோன்
கிட்ட வந்தென்னை அணைத்தான் முத்தமாரி
பெய்தொளித்தான்
எட்டியே பிடிக்க நானும் எழுந்தே வீணே விழுந்தேன்.

# 97. எட்ட நில்லும் !

பதம்

ராகம் : காம்போதி
தாளம் : ஆதி

பல்லவி

**எட்டநில்லுமென்று சொல்லடி சகியே !** - என்னை
தொட்டணைய **வேலவன்** கிட்ட வந்தாலவனை.

அனுபல்லவி

பட்டப்பகல் போலெறிக்கும்
பால்நிலவினிலே என்னை
விட்டுப்பிரிந்திட்ட வடி
வேலவன் வந்தாலவரை

சரணம்

இலவு பழுக்குமென்று
இருந்த கிளியதுபோல் ?
பலமுறை ஏமாந்தேன்
பரிதவித்தேன் உலகில் ?
குலவுவாரோ குமரன்
கூடி மகிழ்ந்திடுவாரோ ?
நிலமதில் என்னை மயக்கும்
நீலமயில் வேலனை.

**ராகம் : வசந்த**

என் வாழ்வு மென்னுயிரும் நின்வசந்தாவென்றேன்
நன் மாமணியே உன்னை நான் மறப்பேனோவென்றான்
ஜென்மாந்தாத்தில் புண்ணியம் ஜெகத்தில்பலித்ததடி
மன்னாதி மன்னனவன் மாமயிலை ஜெகன் மோஹன்

**ராகம் : ரஞ்ஜனி**

அஞ்சன மைவிழியால் அவனெழில் பருகினேன்
அஞ்சுக மொழிபேசி அவன் இதயம் கவர்ந்தேன்
நஞ்சணி கண்டன்தந்த வெஞ்சமர் வேலவன்
**ரஞ்சனி** என்றெனை கொஞ்சி அரவணைத்தான்.

# 95. அடைக்கலம் ஏது ?

ராகம் : பூர்வகல்யாணி
தாளம் : ஆதி

**பல்லவி**

**அன்பருக்குன்னையல்லால் அடைக்கலமேது?**
- ஐயா

நன்**மயிலை**யின்நாதா நற்**கபாலீச்வரனே !**

**அனுபல்லவி**

உன்பெரும் கருணையே உலகில்
துணையென்றெண்ணி
நின்திருமலரடி நினைந்துநினைந்து ஏங்கும்

**சரணம்**

புன்னைமா நிழலில் பொலிய விருந்த என்றன்
அன்னை **கற்பகவல்லி**க் கருள்செய் **கபாலீசனே !**
என்னை மறுக்கலாமோ? என்குல தெய்வம் நீயே !
சென்னை மருவிவளர் ஜெகதீச்வரனே இங்கு

## 98. மயில் மீதில் வந்தானடி

பதம்

ராகம் : சுருட்டி
தாளம் : ஆதி

### பல்லவி

**மயில்மீதில் வந்தானடி** - என்னை
மருவியணைத்தானடி முத்துக்குமரன்

### அனுபல்லவி

அயிலெனமின்னிடும் கதிர்வடிவேலேந்தி
பயிலு செந்தமிழ்சை பாடிப்பாடிப் பறந்து

### சரணம்

இணைபிரியாமல் நாம் இருவரொன்றாகினோம்
இகமதில் பேரின்பக் கடலில் அமிழ்ந்தினோம்
துணையென்னும் வேலவன் துயரத்தைப் போக்கினான்
தூயவன் மாயவன் வேலவன் **ஷண்முகன்.**

# 99. ஈசன் மஹிமை

ராகம் : தேஷ்
தாளம் : ஆதி

### பல்லவி

**மாமயிலை ஈசன்** வரும் மகிமை பாரடி - இந்த
மாநிலத்தில் கண்குளிரக் காணுவாயடி - தோழி

### அனுபல்லவி

காமனைப் பழிக்குமவர்
கட்டழகும் நெற்றிக்
கண்ணழகுமுள்ள எங்கள்
கருணைஹரன் வருவான்.

### சரணம்

வீணையிசைத்தே யடியார் விண்புகழ் பாடுகிறார்
வேதமுதல் நான்கினையும் வேதியர்கள் ஓதுகிறார்
நாணை உடைத்தாக உமைநாதனைத் தழுவுகிறார்
நல்லவர் குதவு தெய்வம் நானிலத்தோர் இன்புறவே.

# 100. ஆனைமுகனே அபயம்

ராகம் : ஹம்சத்வனி                                   தாளம் : ஆதி

### பல்லவி

**ஆனைமுகனே அபயம்** - எம்மை
ஆண்டருள் வாயென்றே
வேண்டினோம் வந்தருள்

### அநுபல்லவி

தேனைப் பழிக்கும் சுவைச்
செந்தமிழால் உன்னை
நான்பாட வரம் தரும்
நல்லவனே அபயம்

### சரணம்

சமயம் இதுதானையா !
சத்குரு நீதானையா !
நமசிவாயப் பொருளின் !
நாதப் பிரணவமே
கமழும் மலர் மலியும்
காட்சி நிறை **மயிலை**
**திகழ்ந்து நர்த்தனமிடும்**
**திருவுருவே மயிலை.**

# 101. மங்களம் பாடிடுவோம்

ராகம் : மத்யமாவதி
தாளம் : ஆதி

### பல்லவி

மங்களம் பாடிடுவோம் - எங்கள்
மயிலைக் கபாலியும் கற்பகமும் மகிழ்ந்திடவே

### அநுபல்லவி

துங்க முகத்தனுக்கும்
சிங்கார வேலவனுக்கும்
திங்கள் முகத்தானுக்கும்
தினகரன் யாவருக்கும்

### சரணம்

எங்கணும் இன்பங்கள் எழிலாய்ப் பொழிந்திடவே
அங்கயற்கண் ணியருள் அவனியில் பொழிந்திடவே
பங்கஜமலர் மலியும் பதிமயிலாபுரியில்
பொங்கும் மங்களம் எங்கும் தங்குக செந்தமிழ்.

"சுபம்"

24410062
© 22441811
27114309

# K.S. IYER CABS

## 24 மணி நேர சேவை வண்டிகள்

*இயற்கை எழில் மிகும் இடங்களில் சுற்றுலாவா? மனதுக்கு நிம்மதி தரும் ஸ்தல யாத்திரையா? அல்லது உங்கள் இல்லங்களில் பிரத்தியேக விழாக்களா? யாவற்றையும் இன்முகம் கொண்டு மீண்டும், மீண்டும் எமது சேவைகளை விரும்பும் விதமாக நன்கு தெரிந்த பயிற்சி பெற்ற ஓட்டுநர்கள் மூலம் எமது நிறுவனம் நிறைவேற்றி வைக்கின்றது. நூற்றுக்கணக்கான வாடிக்கையாளர்களை தன் வசம் கொண்ட எமது நிறுவனம் உங்கள் தேவைகளை எங்கள் சேவைகளாக செய்ய நாடுகிறது.*

*நீங்கள், நாட* ***வேண்டிய நிறுவனம்***

## K.S. அய்யர்

25, காமராஜர் அவின்யூ 2வது தெரு,
அடையாறு, சென்னை - 600 020.

திருமண மண்டபமா? சுவைமிகும் திருமண விருந்தா? மலர் மேடைகளா? மணி முத்து மணவறைகளா? சிறந்த நாதஸ்வர குழுவினரா? கண் கவரும் மலர் மாலைகளா? மறக்க முடியாத நிழற்படங்களா? சொக்க வைக்கும் வீடியோ படங்களா? நாம் மிகவும் தரமான கைதேர்ந்த கலைஞர்கள் மூலம் உங்கள் விருப்பங்களை குறைந்த செலவில், சிறந்த முறையில் பூர்த்தி செய்ய முன் வந்துள்ளோம்.

நீங்கள் நாட வேண்டிய நிறுவனம்

K.S. IYER

25, Kamarajar Avenue 2nd Street,
Adyar, Chennai - 600 020.
Ph : Resi. 24424988, 7115401 Off. 4410062, 418411, 7114309